பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை (23.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:027

# வன்னி மக்களை விடுவிக்காவிட்டால் புலிகள் இயக்கத்துக்கு எதிராகத் தடை

## ஜனாதிபதி கடுந்தொனியில் எச்சரிக்கை



கொழும்பு, டிசெம்பர் 23

**"வன்னியிலுள்ள பொதுமக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதற்குப் புலிகள் உடனடியாக அனுமதிக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் புலிகள் மீது கடுமையான தடையை விதிக்க வேண்டியேற்படும்" - என்று மிகவும் கடுந்தொனியில் எச்சரித்திருக்கின் றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

கொழும்பில்நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்தார் என ஜனாதிபதி செயலகம் தெரி வித்துள்ளது.

"2009 விடியலுடன் தமது கட்டுப்பாட்டில் பணயக் கைதிகளாகவும், அடிமைகளாகவும், மனிதக்கேடயங்களாகவும் வைக்கப்பட்டுள்ள அனைத்து அப்பாவித் தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு 59 லொறிகளில் நேற்று உணவுப் பொருள்கள்

வவுனியா, டிசெ.23

வன்னிக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்கள் 59 லொறிகளில் நேற்று வவுனியாவில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று வவுனியா செயலக அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் இரண்டு லொறிகளில் ஓலைத்தட்டிகளும் வன்னிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக வதிவிடங்களை அமைக்க தேவை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவு

கொழும்பு,டிசெ.23

அவசரகாலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் கீழும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் விசாரணைகளை உடனடியாகத் துரிதப்படுத்தும்படி சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், பொலிஸ் மா அதிபரைப் பணித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை படைகள் பிடித்தாலும் விடுதலைப் புலிகளின் போராட்டம் ஓயாது!

### நடேசன் சூளுரை; ஆயுதக்களைவு சாத்தியமில்லை என்றும் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் பாதுகாப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், அந்த நகரம் வீழ்ந்தாலும் கூட விடுதலைப் புலிகள் தொடர்ந்து போராடுவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு அளித்துள்ள மின்னஞ்சல் பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் தொடர்ந்து கூறியுள்ளவை வருமாறு:-



விடுதலைப் புலிகள் ஆயுதங்களை முதலில் கைவிடவேண்டும். அதன் பின்னரே பேச்சுகளை மேற்கொள்ளலாம் என அரசு,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு பிரதமரிடம் ஐ.தே.கட்சி கடிதம்

கொழும்பு, டிசெ.23

பெற்றோல் விலையை அரசு குறைக்காமல் இருப்பது தொடர்பாகவும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பாகவும் விவாதம் நடத்த நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு ஐ.தே.கட்சி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் எம்பிக் கள் ரவிகருணாநாயக்க மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோர் நேற்றுப் பிற்பகல் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்து இவ் வேண்டுகோள் அடங்கிய கடிதத்தை அவரிடம் ஒப்படைத்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் ஷெல், வான் தாக்குதல்கள்

### 6பொதுமக்கள் காயம்; ஆலயங்கள், வீடுகள் சேதம்!

வவுனியா, டிசெ. 23

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் நேற்றுப் பரவலாக நடத்தப்பட்ட ஷெல் மற்றும் ஹெலித் தாக்குதல்களில் 6 பொதுமக்கள் காயமடைந் துள்ளனர். மக்களின் குடிமனைகள், ஆலயங்கள் மற்றும் பயன்தருமரங்கள் ஆகியனவும் சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் இணையத்தளத்தில் நேற்று இரவு வெளியான செய்திகள் வருமாறு:-

கிளிநொச்சி, வட்டக்கச்சி மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து நேற்றுப்பிற்பகல் 12 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் எஸ்.நாதன் (வயது - 32) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த ஷெல் தாக்குதலில் மக்களின் வீடுகளும் பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி, பொதுவைத்தியசாலையை அண்டிய பகுதியில் வான்படையின் ஹெலிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் காயமடைந்துள்ளனர். வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் வான்படையின் எஃப் - 07 ரக ஹெலிகள் தாக்குதல்களை நடத்தின.

**வைத்தியசாலை வளாகத்திலும் குண்டுச் சிதறல்கள்**

வைத்தியசாலை வளாகத்திலும் குண்டுச் சிதறல்கள் வீழ்ந்துள்ளன. இதில் தேவராசா நவமலர், சிவநாதன் கஜன் (வயது - 33), கனகராசா சிவகாந்தன் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நோக்கி ஐந்து முனைகளில் மீண்டும் முன்னேற இராணுவம் முயற்சி

### படைத்தரப்பில் 100 பேர் பலி;250 பேர் காயம் என்கின்றனர் புலிகள்

கொழும்பு, டிசெ. 23

கிளிநொச்சிப் பிரதேசத்தில் நேற்று மீண்டும் மோதல்கள் வெடித்தன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று அங்கு 5 முனைகளில் மோதல்கள் இடம்பெற்றன என களமுனைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மோதல்கள் தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் நேற்றிரவு 7.30 மணிக்கு பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

கிளிநொச்சியை நோக்கி ஐந்துமுனைகளில் படையினர் நேற்று மேற்கொண்ட முன்நகர்வுகளுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இரண்டு முனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன. மூன்று முனைகளில் முறியடிப்புத்தாக்குதல்கள் தொடர்கின்றன. இதில் இதுவரை 100 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 250 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சியை வல்வளைப்புச் செய்யும் நோக்கில் அதன் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகள் ஊடாக மூன்று முனைகளிலும், குஞ்சுப்பரந்தன் பகுதியில் இரண்டு முனைகளிலும் நேற்று அதிகாலை5 மணிக்கு செறிவான ஆட்லறி, பல்குழல் ஷெல்கள் மற்றும் கனரக பீரங்கிகளின் கடும் சூட்டாதரவுடன் முன்நகர்வுத் தாக்குதல்களை படையினரின் 57, 58 ஆம் டிவிசன்களின் இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுத்தாக்குதல்களுக்கு எதிராக தீவிர முறியடிப்புத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தி வருகின்றனர். கிளிநொச்சிக்குத் தெற்காக இரணைமடுப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று முனைகளில் நேற்றுக் கடுஞ்சமர்; 2.கி.மீ. மண் அணை கைப்பற்றப்பட்டது

### புலிகள் தரப்பில் 56 பேர் பலி என்கிறது பாதுகாப்புத் தரப்பு

கொழும்பு, டிசெ.23

இரணைமடு, அடம்பன், பரந்தன் மேற்கு ஆகிய மூன்று முனைகளில் இராணுத்தின் 57 ஆவதுபடை அணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் கடுஞ்சமர் நடைபெற்றதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சமர் நேற்று மாலைவரை இரணைமடு மற்றும் பரந்தன் பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும், மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 57 பேர் கொலையுண்டதாகவும், 87 பேர் காயமுற்றதாகவும் ஊடக நிலையம் மேலும் தெரிவித்தது.

நேற்று மாலை வரையான சண்டையில் தாம் இரண்டு கிலோ மீற்றர் தூரம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

அதிரடி விலைக்கழிவுகளுடன்
உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

5% தொடக்ம் 20% வரையான விசேட கழிவு

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆச் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திரு ஜெ.குமாரதேவன் அவர்களின் அன்பு மாமனார்

அமரர் வைத்திய கலாநிதி

**பொன்னம்பலம் மகாலிங்கம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்களான திருமதி நளினி சிவசர்மா அவர்களின் தந்தையும், திருமதி சைலஜா விஜயானந்தா அவர்களின் பாட்டனாருமான

**கனகசபாபதிஐயர் சதாசிவஐயர்**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முகாமையாளரும், சக ஊழியர்களும்,
மக்கள் வங்கி, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் வல்லிபுரம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வல்லிபுரம் நேற்று (22.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், விஷ்ணுகரனின் அன்புத் தந்தையும், நிரூபாவின் அன்பு மாமனும், பிறைஸி (Braisey)யின் அன்பு பேரனும், தாமோதரம்பிள்ளையின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.12.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10மணிக்கு இராசவீதி, கோப்பாய் புனித கன்னி மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*கோப்பாய் மத்தி.*

தகவல்:
N.E.தேவசகாயம் (போதகர்).


X'MAS SALE

நத்தார் புது வருட
அதிரடி அசத்தல் மலிவு விற்பனை

NEW YEAR SALE

சகல ஆடை வகைகளுக்குமான விலைக் கழிவு,
ரூபா 5000/=க்கு மேல் கொள்வனவு செய்யும்
பெண்களுக்கு ஸ்கேட் & பிளவுஸ் ஒன்றும்
ஆண்களுக்கு ரீசேட் ஒன்றும் நத்தார் பரிசாக வழங்கப்படும்.
என்றும் இல்லாத, எங்குமில்லாத் தெரிவுகளுக்கு

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

மலாயன் கபே முன்பாக
இல.10, 11, மின்சார நிலைய வீதி,
பெரிய கடை, யாழ்ப்பாணம்.




## வெள்ளச் சேதங்களை உலக உணவு நிறுவனம் சேகரிக்கிறது

நல்லூர்,டிசெ.23

பிரதேச செயலகங்கள் பிரதேச சபைகள் உட்பட அனைத்து அரச திணைக்களங்களிடமும் வெள்ள அனர்த்தம் தொடர்பான சேத விவரங்களை உலக உணவு நிறுவனம் கோரியுள்ளது.

கட்டடங்கள், வடிகால்கள், சிறியவீதிகள் போன்ற சேதமடைந்தவற்றின் விவரங்களை உடன் சமர்ப்பிக்குமாறு அந்த நிறுவனம் கேட்டுள்ளது.

## பருத்தித்துறையில் கிணறுகளை துப்பரவு செய்ய ஏற்பாடு

• பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கிணறுகளில் வெள்ளப் பெருக்கத்தினால் அசுத்தமடைந்த தனியார் கிணறுகளை இறைத்துத் துப்பரவு செய்ய நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கிணற்றை இறைத்துத் துப்பரவு செய்ய விரும்புபவர்கள் அலுவலகத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் கேட்டுள்ளார். (1)

## அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ். அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்கான கடமைகள், தகுதிகள், சம்பள அளவு ஆகிய விவரங்களை மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஆகியவற்றில் பெறலாம் என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை 'பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், அறை இல. 2-22, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-7' என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் நடத்திவரும் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப. 3 மணி - ஜொலிஸ்ரார் வி.க. அணி எதிர் ஓல்ட் கோல்ட் 'பி' அணி.
* பி.ப. 4 மணி - ஓல்ட் கோல்ட் 'ஏ' அணி எதிர் கோப்பாய் ஐ.வி.க. அணி. (1)

## காணவில்லை

எமது வெள்ளை நிற பொம்மேரியன் நாய்க் குட்டியை காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆடிலான்,
88. குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P 077 1259158

## ஒத்துமாறல்

யாழ். கல்வி வலயத்தில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியை வடமராட்சி வலயத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்.

T.P 0777 179205

## சுவாமி சிவானந்த ஜெயந்தி நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.23

சுவாமி சிவானந்த ஜெயந்தி விழா இன்று காலை 5 மணி முதல் தாவடி சமிதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பஜனை, விசேட ஆன்மீக உரை, தீப ஆராதனை என்பன இடம்பெறவுள்ளன. (1)

## மரண அறிவித்தல்கள்

### அப்பச்சி கந்தையா



அளவெட்டி கிழக்கு, அலுக்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பச்சி கந்தையா நேற்று (22.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் ராசபூபதி, கிருபைநாதன், காலஞ்சென்ற அரசரத்தினம், புவனேஸ்வரி (மலர்), உதயகுமார் (கொழும்பு), ரகுநாதன் (கனடா), ஈஸ்வரி (கனடா), மாலினி (கனடா) ரவி (சுழிபுரம்), சிவநாதன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அலுக்கை,*
*அளவெட்டி கிழக்கு.* (81090)

தகவல்:
பிள்ளைகள்.

### நாகப்பர் சுப்பிரமணியம் (J.P)

(Retd. Secretary, Labour Tribunal)



யாழ்ப்பாணம், துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் பிரான்சை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நாகப்பர் சுப்பிரமணியம் (J.P.) 19.12.2008 வெள்ளிக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகப்பர் - பார்வதி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற நவரட்ணம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற தேம்பாமலரின் அன்புக் கணவரும் சிவதாசன் (France), அருள்நிதி (Australia), கணேசதாசன் (UK), சற்குணதாசன் (UK), அருள்தாசன் (France), காசிநாதன் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜாதா, தங்கராஜா, செல்வரதி, புஸ்பதேவி, பிரதீபா, ஷிவேணி ஆகியோரின் அன்பு மாமனாரும் தாமினி, சிவகரன், சிவப்பிரியா ஐங்கரன், சிவஅருண், உமேஷ், சஜந்தன், விமேஷன், வினோதன், அஷ்வினி, ஆரபி, அஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2008) புதன்கிழமை பாரிஸ் பிரான்ஸில் நடைபெறவுள்ளன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
*011 2576227/077 9091581*
*0033 614341992 (அருள்தாசன் - France)*
*0044 7956288032 (கணேசதாசன் - UK)*
*0061 395439723 (அருள்நிதி தங்கராசா - Australia)*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவசுப்பிரமணியம் மனோரஞ்சித ஈஸ்வரி (பேபி)



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் பத்தானை, அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் மனோரஞ்சித ஈஸ்வரி (பேபி) 19.12.2008 அன்று காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (சுப்பிரி) அவர்களின் அன்பு மனைவியும் தர்ஜிதா, தனுசன், சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு தாயும் அமரர் வீரசிங்கம் - சிவயோகம்மா தம்பதியரின் இளைய மகளும் செல்லையா - கனகம்மா தம்பதியரின் மருமகளும் யோகேஸ்வரன் (ஜேர்மனி), மங்களேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தம் (அருள் - லண்டன்), செல்வரட்ணம் (ஜேர்மனி), பவானி (ஜேர்மனி), சற்குணதேவி (கொலன்ட்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் சுரேஷ், சுதா, சுதன் (லண்டன்), தமயந்தி, சத்தியன் (ஜேர்மனி) ஆகியோரின் சித்தியும் பிரபு, கௌசி, வெங்கடேஸ் (ஜேர்மனி), துவாரகன், அனுசன் (கொலன்ட்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2008) புதன்கிழமை பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தானை,*
*அல்வாய்.*

தகவல்:
செ.சிவசுப்பிரமணியம் (கணவர்).




கிறிஸ்மஸ் முதல்

முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....

மாபெரும் பரிசுகளுடன்

விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு

சிறிலங்கா இன்சூரன்ஸ்
MAK Cost Cutter Super Market
உடன் இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
18.12.2008 முதல் 18.01.2009 வரை
You are Safer with the Leader
வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள்

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை

பொங்கல் வரை

உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்

(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நிதி நிர்வாகம் சரியாக இருந்தால் நீதி நிர்வாகம் அதில் தலையிடாது

பெற்றோலின் விற்பனை விலையை நிர்ணயிக்கும் விடயத்தில் உயர்நீதிமன்றம் தலையிட்டு உத்தரவு வழங்கியமை நாட்டில் பெரும் அரசியல் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான பொதுக்கட்டமைப்பை நிராகரித்தும் -

சுமார் பத்தொன்பது ஆண்டுகள் நீடித்த வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை ரத்துச் செய்தும் -

முன்னர் பிரதமராக இருந்த சமயம் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதி கையாள்கையில் மோசடியில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' விவகாரத்தில், ராஜபக்ஷ தவறிழைக்கவில்லை என்று தீர்மானித்தும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக் காலம் 2005 நவம்பருடன் முடிவடைகிறது, அதற்கு மேல் ஒருவருடம் நீடிக்கப்பட மாட்டாது என உத்தரவிட்டும் -

உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது, அத்தீர்ப்புகள் எல்லாம் இன்றைய ஆட்சியாளருக்கு இனித்தன. நீதித்துறையைத் தலையில் தூக்கி வைத்து ஆடினார்கள்.

இப்போது -

அப்பாவித் தமிழ் மக்களை கண்மூடித்தனமாகக் கைது செய்வதையும், பலவந்தமாகத் தலைநகரில் இருந்து ஏற்றி வடக்கு, கிழக்கு அனுப்புவதையும் தடுத்தும் -

கண்மண் தெரியாமல் அமைக்கப்படும் சோதனைத் தடை நிலைகளை அகற்றும்படி பணித்தும் -

ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்காவின் பெயரை தேர்தல் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியமையை இடைநிறுத்தியும் -

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளின் பெயரில் திறைசேரிச் செயலாளரைப் பதவி விலக்கியும் -

எரிபொருள் கொள்வனவு தொடர்பான 'ஹெட்ஜிங்' ஒப்பந்த ஊழலை ஒட்டிய கொடுப்பனவுகளைத் தடுத்தும், அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சேவையிலிருந்து இடைநிறுத்தியும் -

அளவுக்கு அதிகமாக எரிபொருளுக்கு வரி அறவிடுவதைத் தடை செய்தும் -

உயர்நீதிமன்றம் உத்தரவிடும்போது அவை ஆட்சியாளர்களுக்குக் கசக்கின்றன. அதனால் நீதித்துறையைக் கரித்துக் கொட்டுகின்றார்கள் அவர்கள். இத்தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளுக்காக உயர்நீதிமன்றின் பிரதம நீதியரசரைப் பதவி விலக்குவதற்காகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றுக்குக் கொண்டு வருவது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயும் அளவுக்கு நிலைமை போயிருக்கின்றது.

இதேசமயம், பெற்றோலின் விலையை லீற்றருக்கு 100 ரூபாவாகக் குறைக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு ஏறத்தாழ ஒரு வாரமாகிவிட்டது. அதை அரசு இன்னும் நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிப்பது நாட்டில் பெரும் அரசியல் சிக்கலுக்குக் கால்கோள் இடப்படுவதான அச்சத்தை உருவாக்கியிருக்கின்றது.

ஒரு தேசத்தின் ஆட்சிமுறையும் வாழ்வியலும் சிறப்பாக இருக்கவேண்டுமானால் நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சட்டவாக்கல் துறையான நாடாளுமன்றம் ஆகியன சுயாதீனமாகவும், மூன்று பக்கங்களைக் கொண்ட கூம்பகம் போல ஒன்றில் ஒன்று தங்கியும் - அதேசமயம் தனித்தும் - செயற்பட வேண்டும்.

ஆனால், இங்கு நீதித்துறைக்கு எதிராக மற்றைய இரு துறைகளும் சீறிப் பாய்ந்து எழுந்து குழம்பும் சூழல் உருவாகியிருக்கின்றது.

''நாட்டின் நிதி நிர்வாகம் தொடர்பான அனைத்து முடிவுகளையும் நாடாளுமன்றமே மேற்கொள்கின்றது. மேற்கொள்ளவேண்டும். வேறு எந்த அமைப்புகளுக்கும் அந்த அதிகாரம் கிடையாது. இது அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது.'' - என வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன வாதிடுகின்றார்.

ஒரு வகையில் பார்த்தால் அந்த வாதத்தில் அர்த்தம் இருக்கவே செய்கின்றது. எரிபொருள் விலை என்றாலும் சரி, வேறு பொருள்கள் என்றாலும் சரி, அவற்றுக்கு வரி விதிப்பதும் - அல்லது மானியம் அளிப்பதும் - அவற்றின் அடிப்படையில் விற்பனை விலையைத் தீர்மானிப்பதும் நாடாளுமன்றில் பெரும்பான்மையைக் கொண்டு ஆட்சி நடத்தும் அரசின் வேலையாகும். அதில் நீதிமன்றம் நேரடியாகத் தலையிட்டு, தீர்மானம் எடுப்பது எந்தளவு தூரம் சரியானது, நியாயமானது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

ஆனால், அத்தகைய வரி விதிப்புகளும், விலை நிர்ணயங்களும் இயற்கை நீதியின்படி நியாயப்படுத்த முடியாதவையாக முன்னெடுக்கப்படுமானால் -

அவற்றைச் செய்யும் அதிகாரம் அரசுக்குரியதே என்று தெரிவித்துவிட்டு நீதிமன்றம் தள்ளி நிற்பதும் கூட சரியான நீதி நிர்வாகமாக அமையாது.

நிதி நிர்வாக விடயத்தில் நீதித்துறை தலையிட வேண்டிய சூழல் ஏற்படாமல் அந்தத் துறையை சரிவர நிர்வகிப்பது சம்பந்தப்பட்டோரின் கடமை; பொறுப்பு. அதில் அத்தரப்புத் தவறும் போது நீதிமன்றத் தலையீடும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

## கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் குடாநாட்டில் இருந்து வெளியேறும் சாத்தியம் அதிகம்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.மாவட்டத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் தமது பணிகளை இடைநிறுத்தும் சாத்தியம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் 'ஹலோரஸ்ற்' நிறுவனம் தனது பணிகளை ஒட்டு மொத்தமாக நிறுத்தியுள்ளதுடன் கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து தனது பணிகளை மட்டுப்படுத்தி ஆள் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

தற்போது தமது வாகனங்களை மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் நாடுகளுக்கு இடம்மாற்றும் நடவடிக்கைகளை இவை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதவேளை கண்ணிவெடிகளை அகற்றி வந்த 'டெனிஸ்' நிறுவனமும் ஆட்குறைப்பு செய்துள்ளதுடன் தமது பணிகளை மட்டுப்படுத்தியுமுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 260 பணியாளர்களைக் கொண்டு சேவை யாற்றிய இந் நிறுவனம் தற்போது 180 பேருடன் பணிகளை மட்டுப்படுத்தியுள்ளது.

இந்த வருட இறுதியில் ஒப்பந்தம் முடிவடையவுள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் இருந்து பணியாற்றும் இந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் இருவர் வெளியேறவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இடைவிலகிய மாணவர் விவரங்களை திரட்டுகின்றது வடக்கு மாகாணசபை

யாழ்ப்பாணம், டிசெ.23

பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய பிள்ளைகள், இடை வகுப்புகளில் சேர்க்கப்பட்ட பிள்ளைகள். புதிதாக சேர்க்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பான விவரங்களை வடக்கு மாகாண சபை வலயப்பணிப்பாளர்களிடம் கோரியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்குரிய விவரங்களை அனுப்புமாறு மாகாண கல்விப்பணிப்பாளர் வி.இராசையா கேட்டுள்ளார்.

கோட்ட வலய மட்டத்தில் இந்த விவரங்களை பேணுமாறு கேட்டுள்ள அவர் கோட்ட மட்டத்திலான தொகுப்பை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், கருப்பொருள் 1, வடமாகாண கல்வித்திணைக்களம், வரோதய நகர், திருகோணம... என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு ...டுள்ளார். (1)

## உ.கிழங்கை விலைகூட்டி விற்பனைக்கு விட்டமை ஏன்?

### யாழ்.அரச அதிபரிடம் விளக்கம் கோரப்படுகின்றது

கொழும்பு, டிசெ.23

யாழ்.குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட ஒருலட்சம் கிலோ (2 ஆயிரம் மூட்டைகள்) உருளைக் கிழங்கை குறிக்கப்பட்ட விலைக்கும் அதிக விலையில் விற்றமை ஏன் என்பது குறித்து யாழ்.அரச அதிபரிடம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் விளக்கம் கோரியிருக்கிறார் எனத் தெரியவருகின்றது.

இந்தக் கிழங்கை கிலோ 75 ரூபா முதல் 80 ரூபா விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணை யாளர் நாயகம் பணித்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் அரச அதிபரின் வழிகாட்டலில் பலநோக் கூட்டுறவுச் சங்கங்கள் கிலோ 86 ரூபா வீதம் விற்பனை செய்து வருகின்றன என்று அத்தி யாவசிய சேவைகள் நாயகத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

இதையடுத்தே இவ்வாறு அதிக விலைக்கு விற்பனைசெய்தது ஏன் என்ற விளக்கத்தை அவர் யாழ்.அரச அதிபரிடம் கோரியிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து உடன் நேரடியாகத் தலையிட்டு கவனிக்கும்படி அவர் யாழ்.இராணுவத் தளபதியையும் கோரியிருக்கின்றார் என மற்றொரு தகவல் தெரிவித்தது.

## சமீபத்திய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தொழில்துறை நிலையங்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில், கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட தொழிற்துறைசார் நிலையங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட தொழில்துறைசார் நிலையங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றிய விவரங்களையும்-

அவற்றை புணருத்தாரணம் செய்வதற்கு தேவையான செலவீன மதிப்பீடுகளையும்- எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக தொழில் துறை திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளரிடம் படிவங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு அவர் தெரிவித்தார். (1)

## சங்கானையில் மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சங்கானை கல்விக் கோட்டப் பிரிவில் தரம் 5 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடம் பெற்ற மாணவனும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவிருக்கின்றனர். (1)

## வலி மேற்கில் இன்று முன்பள்ளிகளின் கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.23

வலி மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் முன்பள்ளி சிறார்களின் கலைவிழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவி திருமதி சிவரஞ்சினி சத்தியசீலன் தலைமை யில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு கலந்துகொள்ளவிருக்கிறார். (1)

## 'பிக்பொக்கற்' கைவரிசை கொழும்பில் அதிகரிப்பு

கொழும்பு, டிச. 22

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட பண்டிகைகாலத்தையொட்டி கொழும்பில் 'பிக்பொக்கட்' கொள்ளையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களை மடக்கிப் பிடிப்பதற்காக நூற்றுக்கணக்கான பொலிஸார் சேவையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்ஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸார் கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் 24 மணிநேரக் காவலில் ஈடுபடுவர் என்று ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பண்டிகை காலத்தில் குறிப்பாக வர்த்தக நிலையங்களுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யவரும் பெண்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுள்ளார். பண்டிகைக் காலக் கொள்வனவுக்காகச் செல்லும் பெண்கள் அதிக நகைகள் அணிவதையும் நீண்ட பட்டியைக் கொண்ட தோல் பைகள் பாவிப்பதையும் தவிர்ப்பது நன்று என்று ரஞ்ஜித் குணசேகர மேலும் சொன்னார்.

பொதுவாக பிக்பொக்கட் கொள்ளையர்கள் பிளேட் மற்றும் சவரக்கத்தி போன்றவற்றை அதிகம் பயன்படுத்துவர் என்று கூறிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அனைவரும் இவ்விடயத்தில் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சொன்னார். (அ-சி)

## இரவில் வீடு சென்று மின்விளக்கு அணைத்து இளம்பெண்ணை அழைத்துச் சுட்டதில் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணம், நல்லூர்மூத்த விநாயகர் கோவிலடி, முதலாம் ஒழுங்கையில் வைத்து ஞாயிறன்று மு.ப. 11.20 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந் தார்.

துரைசிங்கம் ஆராதனிகா (வயது - 20) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதியின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் வீட்டின் மின் விளக்குகளை அணைத்து விட்டு இளம் பெண்ணின் பெயரைச் சொல்லி அழைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (203-78)

### நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி | 08 | 24.12.2008 புதன்கிழமை |
| திதி: | | துவாதசி பி.ப. 12.25வரை |
| நட்சத்திரம்: | | விசாகம் பி.ப. 01.41வரை |
| சுபநேரம்: | | 04.56 - 06.26 |
| ராகுகாலம்: | | 12.26 - 01.56 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் தஞ்சம் புகுந்துள்ள ஈரானியர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேற உத்தரவு

பக்தாத், டிச. 23

ஈராக்கில் தஞ்சம் புகுந்துள்ள ஆயிரக் கணக்கான ஈரானியர்களை வெளியேறுமாறு ஈராக்கிய அரசு உத்தரவிட்டுள்ளது. இவர்கள் ஈரானிய அரசின் அதிருப்தியாளர்களாவர். நாடு திரும்பினால், தாங்கள் கொல்லப்பட்டு விடுவார்கள் என இவர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

ஈராக்கில் அடைக்கலம் புகுந்துள்ளவர்களில் ஈரானிய அரசுக்கு எதிரான ஈரானிய மக்கள் முஜாஹிதீனின் உறுப்பினர்களும் அடங்குவர். இந்த அமைப்பை அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் பயங்கரவாத அமைப்பாக கணிப்பீடு செய்துள்ளன.

ஈரானிய மக்கள் முஜாஹிதீன் ஆயுதப் போராட்டத்தை ஏற்கனவே கைவிட்டு விட்டது. அத்துடன் இன்று இது ஒரு நிராயுதபாணியான அமைப்பு என அதன் பேச்சாளர் தெரிவித்தார். எனினும், அவர்களை ஈராக்கைவிட்டு வெளியேற்றுமாறு ஈரானிய அரசு வலியுறுத்தி வருகிறது.

ஈரானுக்கோ, இதர நாடுகளுக்கோ நீங்கள் செல்லலாம் என தற்போது ஈராக்கிய அரசு இவர்களை வலியுறுத்தியுள்ளது. வடபக்தாத்திலுள்ள அஷ்ரப் அகதிகள் முகாமில் ஏறத்தாழ 3,500 ஈரானியர்கள் தஞ்சமடைந்துள்ளார்கள். இவர்கள் இருபது வருடங்களாக இங்கு வாழ்ந்து வருகிறார்கள். தற்போது நாட்டைவிட்டு வெளியேறுமாறு இவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

ஈராக்கிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மவாபிஹ் அல்-ருபாய் இம்முகாமுக்கு விஜயம் செய்து அரசின் உத்தரவைத் தெரிவித்தார். இவரது விஜயத்துக்குப் பின்னர் ஈராக்கிய அரசால் அறிவித்தல் அடங்கிய அறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

அவ்வறிக்கையில், ''அகதிகளின் பாதுகாப்புக்கும் ஈராக்கிய அரசே பொறுப்பாகும். அது முகாம்களை மூடிவிடுவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. எனவே, அகதிகள் தம் சொந்த நாட்டிற்கோ, ஒரு மூன்றாவது நாட்டுக்கோ நாடு கடத்தப்படுவார்கள். ஈராக்கில் தொடர்ந்தும் இருக்க அவர்களால் தீர்மானிக்க முடியாது'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கிய பிரதமர் நூரி மாலிகி இவ்வாரப் பிற்பகுதியில் தமது நான்காவது ஈரானிய விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். இவரது ஷியா தலைமையிலான அரசும் ஏற்கனவே ஷியா ஈரானுடன் சிநேக உறவுகளை மீளக் கட்டியெழுப்பியுள்ளது. சதாம் ஹுஸைனின் ஆட்சிக் காலத்தில் இந்த உறவுகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

ஈராக்கிலுள்ள ஈரானியர்களை வெளியேறுமாறு ஈராக் உத்தரவிடுவது இது முதல் தடவையல்ல. 2003 ஆம் ஆண்டு டிசம்பரில் அமெரிக்காவால் ஈராக்கில் நிர்வாக பேரவை உருவாக்கப்பட்டது. அதுவும் ஈரானிய மக்கள் முஜாஹிதீன் உறுப்பினர்களை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்தது. எனினும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1965 ஆம் ஆண்டு ஈரானிய ஷா மன்னரின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக ஈரானிய மக்கள் முஜாஹிதீன் அமைப்பு உருவாக்கப்பட்டது. 1979 ஆம் வருட புரட்சிக்குப் பின்னர் மதத் தலைவர்களால் முஜாஹிதீன் அமைப்பும் அதன் உறுப்பினர்களும் கைவிடப்பட்டனர். இதன் பின்னர் இவர்கள் சதாம் ஹுஸைன் ஆட்சிக் காலத்தில் ஈராக்கில் தஞ்சமடைந்தார்கள்.

1980 ஆம் ஆண்டு அப்போதைய ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுஸைன் ஈரான் மீது போர் தொடுத்தார். இந்த யுத்தம் 1988 வரை நீடித்தது. இப்போர்க் காலத்தில் சதாம் ஹுஸைனுக்கு ஆதரவாக இம் முஜாஹிதீன்களும் ஈரானுக்குள் ஊடுருவி பயங்கரத் தாக்குதல்களில் ஈடுபட்டு வந்தார்கள்.

2001 ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஆயுதங்களைக் கைவிட்டது. அமெரிக்காவின் ஈராக் மீதான படையெடுப்புக்குப் பின்னர் அஷ்ரப் முகாம் அமெரிக்காவின் பாதுகாப்பின் கீழ் வந்தது. அச்சமயத்தில் ஈரானிய மக்கள் முஜாஹிதீன் அமைப்பு ஆயுதங்களை ஒப்படைத்தது. அவற்றுள் ஆயுதங்கள், டாங்கிகள், கவச வாகனங்கள் ஆகியவையும் அடங்கும்.

# ஆறு மாடிக் கட்டடம் இடிந்து பாகிஸ்தானில் பத்துப் பேர் பலி

இஸ்லாமாபாத், டிச. 23

பாகிஸ்தான் ராவல்பிண்டியிலுள்ள ஆறு மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் கட்டடம் சரிந்து விழுந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கி 10 பேர் பலியாயினர். 59 பேர் காயமடைந்தனர். 6 பேரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இது ஒரு வர்த்தகக் கட்டடத் தொகுதியாகும். 350 கடைகளைக்கொண்டது. கட்டடத்தில் எழுந்த தீ, துரிதமாக எங்கும் சுவாலை விட்டுப் பரவியது. தீயணைக்கும் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நீண்ட நேரம் போராடினர்.

எனினும், கட்டடத் தொகுதி சரிந்து விழுந்தது. மீட்புப் பணியாளர் களில் ஆறுபேர் காணாமற் போய்விட்டனர். காயமடைந்தவர்களில் 12 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர். இவ்விபத்து தொடர்பான விசா ரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

# சோமாலிய ஜனாதிபதி மீது தடை; ஆபிரிக்க நாடுகள் கூடி முடிவு

அடிஸ் அபாபா, டிச. 23

கிழக்கு ஆபிரிக்க பிராந்திய நாடுகளின் ஒன்றியமான 'இஹாட்' கூடி, சர்ச்சைக்குரிய சோமாலிய ஜனாதிபதி அப்துல்லாஹி யூசுப் அஹ்மதுக்கும், அவரது உதவியாளர்களுக்கும் எதிராக தடைகள் விதிப்பதற்கு முடிவு செய்துள்ளது.

இந்த ஒன்றியத்தின் கூட்டம் எதியோப்பிய தலைநகரான அடிஸ் அபாபாவில் நடைபெற்றது. ஒன்றியத்தின் ஆறு உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இதில் கலந்துகொண்டார்கள். சோமாலியாவின் அரசியல் குளறுபடிகள், பாதுகாப்புச் சீர்கேடு ஆகியவை குறித்து மிக விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்ட முடிவில், சோமாலியப் பிரதமர் நூர் ஹஸன் ஹுஸைனுக்கும் அவரது புதிய அமைச்சரவைக்கும் ஆதரவு தெரிவித்து அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதேவேளை, சோமாலிய ஜனாதிபதி அப்துல்லாஹி யூசுப் அஹ்மதின் புதிய பிரதமர் நியமனம் அங்கீகரிக்கப்படமாட்டாது என்றும் அதில் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

சோமாலிய ஜனாதிபதி கடந்த ஞாயிற்றுக்கிழமை தாம் விடுத்த திடீர் அறிவித்தலில், ''நான் பிரதமர் நூர் ஹஸன் ஹுஸைனை பதவியிலிருந்து நீக்கிவிட்டேன். அமைச்சரவையும் கலைக்கப்பட்டு விட்டது. விரைவில் புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு ஒன்றியம் தனது அறிக்கையில் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மேற்கொண்ட பதவிநீக்கம், அமைச்சரவை கலைப்பு, புதிய பிரதமர் நியமனம் ஆகியவை அரசமைப்புக்கு முரணானவை. அவை அங்கீகரிக்கப்படமாட்டா என்றும் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை, மறுதினமான திங்கட்கிழமை சோமாலிய நாடாளுமன்றம் கூடி பதவி நீக்கம் சட்டத்துக்கு முரணானது எனப் பிரகடனம் செய்தது. அத்துடன் பிரதமர் மீதும் அவரது அமைச்சரவை மீதும் நம்பிக்கை தெரிவித்து, பெரும்பான்மை வாக்குகளால் பிரேரணையொன்றையும் நிறைவேற்றியது.

கிழக்கு ஆபிரிக்க ஒன்றியக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர்கள், இதனையும் தங்கள் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக எடுத்துக்கொண்டார்கள். அத்துடன் ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்குக்குக் கடும் கண்டனம் தெரிவித்த அவர்கள் ஜனாதிபதிக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எதிராக உடனடியாக தடைகள் விதிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகளை ஏனைய நாடுகளும் மேற்கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். சோமாலிய அரசு படைகளுக்கு உறுதுணையாகவிருந்து தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி வரும் எதியோப்பிய துருப்புகளின் வாபஸ் குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

''எதிர்வரும் வாரங்களில் தனது துருப்புகளை மீளப் பெற, எதியோப்பியா முன் வந்துள்ளது. இதற்கு மாற்று நடவடிக்கையாக இதர நாட்டுத் துருப்புகள் அனுப்பி வைக்கப்படும். நைஜீரியா அதன் துருப்புகளை அனுப்பி வைக்க தயாராகவுள்ளது'' என ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழுவின் தலைவர் ஜேன்பிங் தெரிவித்துக்கொண்டார்.

# கொலை மிரட்டலுக்கு ஒருபோதும் அஞ்சேன்!

## பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஆவேசம்

டாக்கா, டிச. 23

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, கொலை மிரட்டல்களுக்கோ, மரணத்துக்கோ தாம் அஞ்சவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவரை பயங்கரவாதிகள் கொலை புரிய திட்டமிட்டுள்ளார்கள் என வெளியான தகவல்களைச் சுட்டிக் காட்டி உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை குறித்து அவர் கருத்து வெளியிடுகையில், ''நான் பங்களாதேஷின் ஸ்தாபகர், தந்தை முஜிபுர் ரஹ்மானின் புதல்வி. இது போன்ற அச்சுறுத்தல்களைக் கண்டு நான் ஒருபோதும் அதிர்ந்ததுமில்லை; அஞ்சியதுமில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் எதிர்வரும் 29 ஆம் திகதி பொதுத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதன் பொருட்டு ஹசீனா தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

''ஷேக் ஹசீனாவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவரைக் கொலைசெய்ய 6 பேர் கொண்ட தற்கொலைப் படையொன்று திட்டமிட்டுள்ளது'' என இந்திய தனியார் தொலைக்காட்சி அலையொன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக அரங்கில்

# ஆளில்லா அமெ. விமானம் தாக்குதல்; பாகிஸ்தானில் ஏழுபேர் உயிரிழப்பு

பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியமான தென் வசிரிஸ்தானில் ஆளில்லா அமெரிக்க விமானமொன்று மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். வீடொன்று நிர்மூலமாக்கப்பட்டது என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஆப்கான் எல்லையோடு ஒட்டிய தென்வசிரிஸ்தானிலுள்ள இரு கிராமங்களை இந்த ஏவுகணைகள் தாக்கின. இவற்றில் பலியானோர் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை என்றும் அவர்கள் பி.பி.ஸிக்கு குறிப்பிட்டார்கள்.

''ஏவுகணைத் தாக்குதல் ஒன்றில் பாரிய வீடொன்று தரை மட்டமானது. உள்ளூர் தலிபான்கள் சிதைவுகளை அப்புறப்படுத்தி சடலங்களை மீட்டார்கள்'' என யார் மொஹமத் என்னும் கிராமவாசியொருவர் அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''சிரேஷ்ட அல்-கொய்கா அல்லது தலிபான் உறுப்பினர்களை இலக்கு வைத்து இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டனவா? என்ற விவரம் வெளியாகவில்லை. பலியானோரின் சடலங்களும் இன்னும் அடையாளங் காணப்படவில்லை'' என பாதுகாப்பு அதிகாரியொருவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

# பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டோரை விடுவிக்க கொலம்பிய தீவிரவாதிகள் இணக்கம்

பல வருடங்களாகத் தங்களால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு அரசியல்வாதிகளும், நான்கு பாதுகாப்பு அதிகாரிகளும் அதிவிரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என கொலம்பிய பார்க் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளார்கள்.

இத்தீவிரவாதிகள், வனாந்தரத்துக்குள் அமைந்துள்ள தங்கள் முகாம்களில் இந்த ஆறு பேரைத் தவிர இன்னும் நூற்றுக்கணக்கானோரையும் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்துள்ளார்கள்.

இவர்கள் பணயப் பணத்திற்காகவோ, அரசால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தங்கள் சகாக்களை விடுவிக்கக் கோரியோ பிரபலமானவர்களைக் கடத்தி, பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்துவிடுகிறார்கள்.

ஆறு பேரின் விடுதலை தொடர்பாக இத்தீவிரவாதிகள் அறிக்கைகளின் வாயிலாக உள்ளூர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்கள். ஆறு பேரும் கொலம்பிய இடதுசாரி செனட்டரிடம் கையளிக்கப்படுவார்கள் எனக் குறிப்பிட்டுள்ள இவர்கள், விடுதலைக்கான திகதியை திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. எனினும், 'விரைவில்' என்ற பதத்தையே பயன்படுத்தியுள்ளார்கள் என ரொய்ட்டர், ஏ.பி.செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

''முதல் கட்டமாக மூன்று பொலிஸ் அதிகாரிகளும், ஓர் இராணுவ வீரரும் விடுதலை செய்யப்படுவர். பின்னர் அரசியல்வாதிகளான முன்னாள் ஆளுநரும், முன்னாள் காங்கிரஸ் பிரமுகரும் விடுதலை செய்யப்படுவர். எங்கள் சகா ஒருவரை விடுவிக்க அரசு முன்வந்துள்ளமையையொட்டியே இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளார்கள்'' என்றும் ஊடக அறிக்கைகளில் தீவிரவாதிகள் விளக்கியுள்ளார்கள்.

எட்டு ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பிறிதொரு முன்னாள் காங்கிரஸ் பிரமுகரான ஒஸ்கார் டுளியோ லிஸ்கனோ ஒருவாறு ஒக்டோபரில் தப்பி வந்துவிட்டார். ஜூலை 15 ஆம் திகதி இராணுவம் அதிரடி வேட்டையை மேற்கொண்டு 15 கைதிகளை மீட்டுள்ளது. இவர்களில் முன்னாள் கொலம்பிய ஜனாதிபதி வேட்பாளர் இங்ரிட் பெண்டன் கோர்ட்டும் அடங்குவார்.

கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படைகள் என்னும் பெயரில் இயங்கும் பார்க் தீவிரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என கோரிக்கை விடுத்து, பல்லாயிரக்கணக்கான கொலம்பியர்கள் இதற்கு முன்னர் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நடத்தியுள்ளார்கள்.

# கொங்கோவின் தீவிரவாதிகளின் முகாம்களில் எழுபது வீதம் அழிக்கப்பட்டதாக அறிவிப்பு

கம்பாலா, டிச. 23

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் வட பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ள எல்.ஆர்.ஏ. தீவிரவாதப் போராளிகளின் 70 வீதமான முகாம்கள் அழித்தொழிக்கப்பட்டுவிட்டன என உகண்டா அரசு தெரிவித்தது.

பிரபுவின் எதிர்ப்பு இராணுவம் என்னும் பெயரில் இயங்கும் தீவிரவாத அமைப்பொன்றின் போராளிகளே இவர்களாவர். வட கொங்கோவிலுள்ள பின்தங்கிய பிராந்தியத்தில் இவர்கள் நிலைகொண்டுள்ளார்கள் என பாதுகாப்பு வட்டாரம் குறிப்பிட்டது.

இப்போராளிகள் [illegible] தலைமையில் இயங்குகிறார்கள். இவர்கள் உகண்டாவுக்குள் புகுந்து தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள். எனினும், இராணுவத் தாக்குதல்களிலிருந்து சாதுரியமாகத் தப்பி வட கொங்கோ எல்லைக்குள் புகுந்து விடுகிறார்கள் என பாதுகாப்பு அதிகாரி ஒருவர் விவரித்தார்.

இந்தப் போராளிகள் உகண்டா முதல் மத்திய ஆபிரிக்க குடியரசு வரை உள்ள நாடுகளில் தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள். இப்போராளிகளின் பயங்கரவாதத் தாக்குதல்களால் கடந்த இருபது ஆண்டுகளாக இந்நாடுகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. சிறுவர் [illegible]ர்கள். இலட்சக்கணக்கா[illegible] இடம்பெயர நிர்ப்பந்தித்துள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

இவர்களுடன் மேற்கொண்ட சமாதானப் பேச்சுகள் பிசுபிசுத்து விட்டன. உகண்டா, தென் சூடானிய, கொங்கோலியப் படைகள் கூட்டாக இப்போராளிகளின் முகாம்கள் மீது மும்முரமாகத் தாக்குதல்களை மேற்கொண்டன. இவற்றில் 70 வீதமான முகாம்கள் அழித்தொழிக்கப்பட்டன என உகண்டா பாதுகாப்பு வட்டாரம் மேலும் தெரிவித்தது.

எல்.ஆர்.ஏ. இயக்க முகாம்கள் மீது ஜெற் விமானங்கள் தாழப் பறந்து குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இது கண்டு, கொங்கோலிய டுரு நகரவாசிகள் வெளியே வந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள் என பி.பி.ஸி. நிருபர் மார்ட்டின் பிளேயுட் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான கணிப்பீடுகள், தொலைநோக்கான நடவடிக்கைகள் என்பவற்றினாலேயே யாழ்ப்பாண விவசாயத்துறையை மீண்டும் முன்னேற்ற முடியும்

யாழ்.மாவட்டத்தின் உப உணவுப் பயிர்ச் செய்கை சூனியமாக்கப்பட்டுள்ளது. மரக்கறிகள் 1000 ரூபாவை எட்டித் தொட்டுள்ளதாக மக்கள் புலம்புகிறார்கள். இலங்கை முழுவதற்கும் மரக்கறி விநியோகித்த யாழ்ப்பாணத்திற்கு தற்போது கொழும்பு மரக்கறிகள் விமானமூலமாக அவசரமாக எடுத்துவரப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த வெற்றிடத்தைப் பயன்படுத்தி அதிக பணம் சம்பாதிக்க எண்ணும் சிலர் வேகமாக உப உணவு உற்பத்திக்கு தம்மை தயார்படுத்தி வருவதையும் காண முடிகிறது.

மனிதகுல வரலாற்றில் வேட்டையாடுதல், மந்தை வளர்ப்பு ஆகியவற்றுக்கு அடுத்த படியாக தோன்றிய ஆதியான தொழிற் பிரிவு விவசாயம் ஆகும். அதன் பின்னர் உலகம் முழுவதும் எண்ணிலடங்காத தொழிற் பிரிவுகள் ஆரம்பித்து உள்ளன. ஆயினும் பயிர்த்தொழில் இன்று வரை உலகம் முழுவதிலும் தனது இடத்தை தக்க வைத்துள்ளது. உலகம் உள்ளவரை அது நிலைக்கும் என்பது உண்மையாகும்.

சமூக மாற்றங்களுக்கு ஏற்ப முன்னேறிய வாழ்க்கைத் தரத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் உலக நாடுகள் பலவற்றில் விவசாயிகளின்வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ள போதிலும் எங்களுடைய தேசத்தில் அது இன்றுவரை முயற்கொம்பாகவே உள்ளது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்றார் வள்ளுவர். ஆனால் இன்று உரம் மருந்துக் கம்பனிகளும் அதன் விற்பனை யாளர்களும் ஊதிப்பருத்து உயிர்வாழ, விவசாயிகள் உருக்குலைந்து போகும் நிலையே தோன்றியுள்ளது. காலத்திற்கு காலம் விவசாயத்தில் ஏற்படும் தோல்விகள் விரிந்து செல்வதைக் காணலாம்.

காலத்தின் தேவை கருதியும், நவீன அறிவியல் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும், சந்தை வாய்ப்புக்களையும், நுகர்வோரையும் கருத்தில் கொண்டும் வடபகுதி விவசாயம் திட்டமிடப்படுவதைக் காண முடிவதில்லை என்று கூறலாம்.

பரம்பரை பரம்பரையாக மண்ணோடு புதைந்து, அதிலிருந்து மீளாமல், வெளி உலகைப் பார்க்கத் தயாரில்லாமல் மீண்டும் ஒரே பாடத்தையே படித்துக் கொண்டிருக்கும் விவசாயிகள் இலகுவில் அதிலிருந்து விடுபடமாட்டார்கள் என்பதே அவர்களின் உற்பத்தி உறவுச் சிந்தனையாகும். இதை அறிவியலாளர்கள் புரிந்து கொண்டு அவர்களுக்கான வழிகாட்டல்களை கருத்துக்களாக மட்டுமன்றி செயல்முறையாகவும் வழங்கத் தயாராக வேண்டும்.

அண்மைய இயற்கை அழிவும், வடபகுதி விவசாயத்தில் ஏற்பட்ட சூனியமும் இதற்கு நல்லதொரு வாய்ப்பான காலமாகும். புதியதொரு ஆரம்பத்துக்கு விவசாயிகள் தயாராக நிற்கும் இந்த வேளையில் நடந்து முடிந்த பிரளயத்தின் புதிய ஆரம்பம், மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு களமாக அமைய வேண்டும்.

எந்த ஒரு உற்பத்தியின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் அதன் நுகர்விலும், பரிவர்த்தனையிலுமே தங்கியுள்ளது. ஒரு காலத்தில் வடபகுதி மரக்கறிகளுக்கு தென்பகுதியில் நல்ல கிராக்கி இருந்தது. புகைவண்டிகளிலும், கனரக வாகனங்களிலும் வரிசையாக கொழும்பு நோக்கி எமது பண்டங்கள் பயணித்த காலமொன்று இருந்தது. அத்துடன்குடிப் பரம்பலிலும் வடபகுதி மிகவும் அடர்த்தி கூடிய பிரதேசமாக இருந்தது. இதனால் உற்பத்தியின் கணிசமானபகுதி யாழ்ப்பாணத்துக்குள்ளேயே நுகர்வுகளாய் உள் வாங்கப்பட்டது. எனவே வடபகுதியில் அபரிதமான உற்பத்திக்கு எவ்வித தடை யும் இருக்கவில்லை.

ஆனால் இன்று நிலைமை முற்றாக மாறியுள்ளது. குடாநாட்டுக்குள்ளே இருக்கின்ற சந்தைகளுக்குக் கூட பொருள்களைப் பரிவர்த்தனை செய்யமுடிவதில்லை. இதற்கு போக்குவரத்து, கெடுபிடிகளோடு குடாநாட்டுக் குடிப்பரம்பலும் நாளுக்கு நாள் வெகுவாக குறைவடைந்து வருவதும் முக்கிய காரணிகளாகும். இதனால் நுகர் வோர் எண்ணிக்கை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இவற்றினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களின் நிலைமைகளை அறிந்திருக்காத- புரிந்துகொள்ளாத- விவசாயிகள் கடந்த காலத்தில் கற்றுக் கொண்ட தோல்வியின் பாடங்களை மீண்டும் ஒருமுறை கற்க வேண்டிய பரிதாபம் ஏற்பட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

தற்போது எமது பகுதியில் வசிக்கின்ற மக்களே விவசாய உற்பத்தியின் நுகர்வோராக உள்ளனர். அவர்களுக்குத் தேவையான பொருள்களின் அளவு பற்றிய சரியான மதிப்பீடு விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்படாமையினாலும், பலதரப்பட்ட விவசாய உற்பத்திப் பொருள்கள் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றுக்கான ஆலோசனைகளும், அளவீடுகளும் சரியான வகையில் வழங்கப்படாமையினால் விவசாயிகள் தமக்குத் தெரிந்த தமது சூழலில் காணப்படும் பயிர்களை ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் பயிரிட எத்தனிப்பார்கள். இதனால் குறித்த சில உற்பத்திப் பொருள்களில் காலத்துக்குக் காலம் மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை வீழ்ச்சி அடைந்து, பயனற்றுப் போய் தோட்டங்களில் கிடந்து அழுகி மணக்கின்ற நிலையே இதுவரை ஏற்பட்டது. இனிவரும் நாள்களிலும் இவ்வாறான தவறான கணிப்புகள் கொண்ட விவசாய நடவடிக்கைகள் தொடர வாய்ப்புள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயத்துறையை முன்னேற்றுவதற்கான பொறுப்பில் உள்ளவர்கள் நல்லதொரு ஆரம்பத்திற்கான அத்திவாரத்தை இச்சந்தர்ப்பத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேலும் இன்று தோன்றியுள்ள விவசாயப் பண்டங்களுக்கான வெற்றிடத்தைப் பயன்படுத்தி துரித உற்பத்தியினூடாக வாய்ப்புக்களைப் பெறலாம் என்ற ஒரே இலக்கை மனதில் நிலை நிறுத்தி புறநிலையாக வரும் ஆபத்துக் களைக் கருத்திற்கொள்ளாது விவசாயிகள் செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

சரியான கணிப்பீடுகளையும், தொலைநோக்குத் தன்மை கொண்ட நடவடிக்கைகளையும் விவசாயிகளும், விவசாய சம்மேளனங்களும் இணைந்து மேற்கொண்டால் மீண்டும் விவசாயத்துறையில் குடாநாட்டை முன்னேற்ற முடியும்.

- சி.[illegible] -

# விவசாயத்துறை மூலம் குடாநாட்டை வளப்படுத்தி விருதுகளையும் வென்றெடுத்த விவசாயிகள்

**யாழ்.விவசாயத் திணைக்களம் யாழ். மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட சிறந்த விவசாயிகளைக் கௌரவித்தது. போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பெற்ற எட்டு விவசாயிகள் தமது கருத்துக்களை உதயனுடன் பகிர்ந்து கொண்டனர். அவர்களது கருத்துக்களை ஏனைய விவசாயிகளும் அறிந்து கொள்ளும் பொருட்டு இங்கு பிரசுரமாகின்றது.**

**பொ.தர்மலிங்கம்**
**(சிறந்த நெல் உற்பத்தியாளர்)**
**சரசாலை தெற்கு.**



நிவாரணங்கள் மக்களைச் சோம்பேறிகளாகவும் எதிர்பார்த்து நிற்பவர்களாகவும் மாற்று கிறது. இந்த நிலை மாற வேண்டும். சுய முயற்சியால் வாழப்பழக வேண்டும். 1968 இல் எங்களுக்கு துணுக்காயில் காணி கிடைத்தது. எனக்கு உழவு இயந்திரம் ஓடப் பழக வேண்டும் என்ற ஆசை. அதன் போதுதான் விவசாயத்திலும் ஆர்வம் ஏற்பட்டது. அரச ஊழியர் களை விட விவசாயிகளிடத்தில் காசு கூடுதலாக புளங்குவதும் ஒரு காரணம்தான். தென்மராட்சி நெற்செய்கைக்கு உகந்த இடம். இந்திய அமைதிப்படை வந்ததும் எனது குடும்பத்துடன் திரும்பி வந்து கமம் செய்வதையே தொழிலாகக் கொண்டேன். துணுக்காயில் கிடைத்த அனுபவங்கள் விவசாய திணைக்களத்தின் பயிற்சிகள் அறிவுரைகள் என்பன என் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தின. விலை கொடுத்து நெல்லைக் கொள்வனவு செய்யும் நாங்கள் இங்கேயே விதை நெல்லை அதிகரித்து ஏனைய விவசாயிகளுக்கும் கொடுத்தும் எமது பிரதேசத்தின் உற்பத்தியைக் கூடுதலாக்க உதவ வேண்டும் என எண்ணி அதில் வெற்றியும் கண் டேன்.

**செல்வி சோ.ரேணுகா (27)**
**(சிறந்த சோளச் செய்கையாளர்.)**
**கெருடாவில் தெற்கு.**

போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் சோளச் செய்கையில் ஈடுபட வில்லை. நாங்கள் பத்துப் பேர்களைக் கொண்ட பெரிய குடும்பம். எனது தந்தையார் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர். சூழ்



நிலைகளால் தொழிலைச் செய்ய முடியாத நிலையில் விவசாயத்தில் இறங்கினேன். இன்று எமது வாழ்க்கைக்கு கைகொடுப்பது விவசாயம்தான். வெற்றிலை, மாதுளை, தேசி என்பவற்றைச் செய்கை பண்ணுகின்றோம். எமது முக்கிய உற்பத்தி வெற்றிலையும் சோளமுந்தான். இவற்றின் கூடுதல் உற்பத்திக்காக விவசாயத் திணைக்களம் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. இன்று தினமும் வெற்றிலை விற்பனை செய் யக் கூடியதாக இருக்கிறது. தினசரி 500 ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைக்கிறது. இதற்கு விவசாயத் திணைக்களத்திற்குத்தான் நன்றி கூறவேண்டும். நான் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்துள்ளேன். எனினும் வேலை எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? தரமான உற்பத்தி என்பதால் பல இடங்களில் இருந்தும் சோளம் வாங்கிக் கொள்ள வருகிறார்கள். விற்பனையும் நன்றாக உள்ளது. வேலை கிடைக்கவில்லைஎன்ற கவலையை விடுத்து வருமானம் கிடைக் கக்கூடிய விவசாய முயற்சிகளில் இளைஞர், யுவதிகளும் ஈடுபட வேண்டும். என்பதே எனது விருப்பமாகும்.

**டானியல் டேவிற் (64)**
**(சிறந்த நிலக்கடலை செய்கையாளர்,)**
**கோப்பாய் தெற்கு.**

நான் கச்சான், மரக்கறி வகைகளுடன் நெல்லும் உற்பத்தி செய்கிறேன். விவசாயம் எனது நீண்ட காலத் தொழில். எனது விவசாய நிலம் 1[illegible] வைத்துள்ளேன். [illegible]ருமே விவசாய நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றோம். வருமானம் என்று மாதத்திற்குக் கணக்கிட முடியாது. அறுவடைக்குப் பின் செலவு போக ரூபா 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரைகிடைக்கிறது. சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி விவசாயநடவடிக்கைகளில் ஈடுபடுவதால் பெரிய அளவில் செலவுகள் இல்லை. யூரியாவும் பயன்படுத்துவதுண்டு. இம்முறை 30 பரப்பில் நெற்செய்கை பண்ணியிருக்கிறேன். வெள்ளம் எல்லோருக்குமே சேதங்களையும், அழிவுகளையும் உண்டு பண்ணியுள்ளது. விவசாயத் திணைக்கள அதிகாரிகள் எல்லோருமே விவசாய நலனிலும் நவீன பொறி முறைகளை அறிமுகப்படுத்தி அதனூடாக தரமான உற்பத்திகளை ஏற்படுத்த வேண்டுமென்ற முனைப்புடனும் செயற்படுவது விவசாயிகளுக்கு ஒரு நல்ல சகுனமாகவே நினைக்கிறேன். விவசாய போதனாசிரியர்கள் அவ்வப்போது எமது பயிர் வகைகளை பார்வையிட்டு தகுந்த ஆலோச னைகளை வழங்கி வருவது உற்பத்தித்திறன் அதி கரிப்புக்கு உதவியாகவிருக்கிறது ஏனைய விவசாய மக்களும் விவசாயம் குறித்த அறிவுரைகளைகேட்டுத்தெரிந்து கொண்டு நல்ல பயனைப் பெற வேண்டும்.



**சி.தயாபரன்**
**(சிறந்த [illegible] செய்கையாளர்)**
**[illegible]பிராய் தெற்கு.**

எனது 20 ஆவது வயதில் இருந்தே விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகிறேன். இது எனது முழு நேரத் தொழிலாகி விட்டது என்பதில் மகிழ்ச்சியாயுள்ளது. மரவள்ளி, கத்தரி, சோளம், வெங்காயம் போன்ற பயிர் வகைகளை உற்பத்தி பண்ணுகின்றேன். இருப்பினும் எனது முதன்மைப் பயிர் குரக்கன் தான். அதனால் தான் சிறந்த குரக்கன் செய்கையாளர் போட்டியில் கலந்து கொண்டு பரிசையும் வென்றேன். ரவிராவரை போன்றஇனக்குரக்கன் பயிர்கள் நல்ல விளைச்சலைத் தருகின்றன. 4 பரப்பு நிலத்தில் செய்கை பண்ணுகின்றேன். இம்முறை 1100 கன்றுகளில் 635 கிலோ குரக்கனைப் பெற்றுக் கொண்டேன்.



இந்தப் பயிர்கள் நிகரலாபம் தரத்தக்கது. மாரியில் செய்தாலும் கூடராவரை லாபம் தரும் ஒன்றாகவே காணப்படுகின்றது. நீண்டகால அனுபவத்துடன் விவசாயத் திணைக்களத்தின் பயிற்சிநெறிகளும் நம்மிடையே கூடிய செயற்றிறன் ஏற்பட வழிவகுக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரை எத்துணை அனுபவம் இருந்தாலும் விவசாயப் பிரிவு வழங்கும் நவீன செயல்முறை பற்றிய அறிவும் தேவை. ஒவ்வொரு விவசாயியும் இதைக் கவனத்தில் எடுத்து அனுபவத்துடன் தேவையான அறிவையும் பெற்றவர்களாகத் தம்மை ஸ்திரப்ப டுத்திக் கொண்டு செயற்படும் பட்சத்தில் கூடுதல் வருமானத்தை ஈட்ட முடியும் என்பதும் உணவுத் தட்டுப்பாடு என்ற நிலையைத் தவிர்க்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

**சந்திப்பும், படங்களும்: நம்பி**

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்டத்தின் 2008ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

உதவி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.

யாழ்.கமநல சேவைகள் உதவி ஆணையாளர் எம்.பற்றிக்டிறஞ்சன், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி திருமதி சி.சிவச்சந்திரன், யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோர் விவசாயப் போட்டிகளில் வெற்றிபெற்ற விவசாயிகளுக்கான பரிசில்களையும் சான்றிதழ் வழங்குவதையும் அடுத்த மூன்று படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள முதலாவது உரிமையாளரின் பாவனையிலுள்ள உழவு இயந்திரம் (டிராக்டர்) TAFE NP.JZ XXXX இலக்கமுடையது. அதன் இணைப்புப் பெட்டியுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: செ.நல்லையா (S.N.V)
அளவெட்டி கிழக்கு. T.P. 060 221 9605



## கோழிப் பண்ணை விற்பனைக்கு

நிலக்கூடு, கம்பிக்கூடு, மேஸ்கான், தண்ணிக்கான் (அனைத்து அளவுகளிலும்) விற்பனைக்குண்டு. அல்லது அனைத்தையும் வாங்கி 2010ஆம் ஆண்டுவரை கோழி வளர்ப்பதற்கான அனுமதிப் பத்திரத்துடன் அதே காணியில் வாடகைக்கு 2000 ரூபா அடிப்படையிலும் மேற்கொள்ளலாம்.

தொடர்பு: இல 05, இராமநாதன் வீதி,
செம்மணி றோட், செம்மணி.
T.P.077 5293042
*(3 மணிக்குப் பின் பார்வையிடலாம்).*



## தவறிவிட்டது

கைலாய வைரவர் கோயிலடி, மல்லாகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் செந்தூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (840903605V) விசேட அடையாள அட்டை, தேசிய கல்வியியற் கல்லூரி அ.அட்டை கடந்த 18.12.2008 அன்று மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.N. Communication மல்லாகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P.021 222 5598



# கண்ணீரில் ஓராண்டு



## அமரர் கந்தையா நற்குணம்
[குணம் மோட்டோர்ஸ் - கிளிநொச்சி]

மலர்வு 10*06*1944

உதிர்வு 04*01*2008

ஊரும் உலகும் போற்றிப் புகழ
உழைப்பால் உயர்ந்த உத்தமனே குணமே!
பாரில் வாழ்வை போதுமென்றெண்ணி
பயணம் செய்தாய் பரிதவித்தோம் ஐயா!
ஓராண்டு ஒருகணமாய் உருண்டே வந்தது
உறவுகளின் உள்ளத்தில் ஒளியாய் ஒளிர்கின்றாய்
தொழில் நுட்பமும் திடமான மனமும்
தொழில் வல்லுனர்களைத் தேசத்தில் தோற்றுவித்தன
உறவுகளின் உயர்வுக்கு உறுதுணையாய் இருந்தாய்
உயிருள்ளவரை உன்னை மறவோமே!

'செல்வகிருஷ்ணா'
அல்வாய் வடமேற்கு.

ஈர விழிகளுடன்:
V.K.S.குடும்பத்தினர்.

(இ/556016)


## சிறுவர் குரல் அலைகள் நிகழ்வு நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.சமூக செயற்பாட்டு மையமும் சிறுவர் கழகங்களும் இணைந்து நடத்தும் ''சிறுவர் குரல் அலைகள்'' நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் செல்வி மகாலிங்கம் யசோதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம், யாழ்.யுனிசெவ் பிரதிநிதி மகினொடா ஆகியோர் கலந்துகொள்வர். (201)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் அடுத்த ஆண்டு புதுமுக மாணவர்களுக்கான அறிமுக ஆங்கில விரிவுரைகள் பகல்நேர மாணவர்களுக்கும் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. அனைத்து பகல் நேர மாணவர்களையும் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு கட்டாயம் சமுகமளிக்குமாறு நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் து.இராமஜெயம் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் காலை 8.15 மணிக்கு யாழ். பிரதான பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து நிறுவனத்தை நோக்கி புறப்படும் பேருந்தில் தமது பயணத்தை [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (201)


# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## செல்லையா வீரசிங்கம்
(முன்னாள் முகாமையாளர், திருநெல்வேலி ப.நோ.கூ.சங்கம்)

திதி: 23.12.2008

தோற்றம்: 21.10.1926

மறைவு: 17.12.2006

ஆண்டிரண்டானதுவே ஐயா!
உன் முகம் காணாது, ஆறவில்லை ஐயா!! எம்மனம்
இனி எந்தப் பிரபஞ்சத்தில் உமைக்காண்போம்
என்றும் உம் பாச ஒளி - எம் மனதில்
ஒளிர்ந்துகொண்டே இருக்கும்.

எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தி அடைய
மீனாட்சி அம்மனைப்
பிரார்த்திக்கும்.

- குடும்பத்தினர்.

198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

## வாழும் கலை பயிற்சி - பாகம் I



## இன்று ஆரம்பம்

இடம்: துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்.
நேரம்: காலை 6.30 - 8.30 அல்லது
மாலை 3.30 - 5.30

பயிற்சி இலவசம்

*குறிப்பு:* இலவச பயிற்சிகளின் இறுதிப் பயிற்சி இதுவே.

## சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்,
தொ.பே.: 077 9434 879, 077 9749346


# ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டுவது)

**1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

**கிளை : யாழ்ப்பாணம்**

செல்வரட்ணம் திருவருட்செல்வம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.பணிப்பாளர்கள் சபையினால் 2008ஆம் ஆண்டு 25 செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேட மாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

''செல்வரட்ணம் திருவருட்செல்வம் கடப்பாடுடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.சார்பில் யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எம்.தியாகராஜாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005 மார்ச் 03ஆம் திகதியிடப்பட்ட 7891 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளமையாலும், 2008 ஜூலை 31ஆம் திகதியன்று உள்ளவாறான ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்குச் சொல்லப்பட்ட முறி மீது பதினொரு இலட்சத்து பதினெட்டாயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஒரு ரூபா இருபத்தி ஐந்து சதம் (ரூபா 1,118, 671. 25) தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.பணிப்பாளர்கள் சபையானது, 1990ஆம் ஆண்டில் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 7891 முறி மூலம், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனமும், வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,118, 671.25 கொண்ட பணத்தொகையை 2008 ஒகஸ்ட் 1ஆம் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ.டபிள்யூ.ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பிரிவில் உள்ள புத்தூர், பாரிஷ் சின் ஆவரங்கால் ''நீதித்தோட்டம்'' என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.அம்ரோசினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 1720/12.05.1970 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2இற்கு அமைய 1எல்.எம். வீ.சி. மற்றும் 17.01. குளிகளைக் கொண்டுள்ள ஆதனத்தின் எல்லைகள் கிழக்கு காணித்துண்டு 10 இல் காட்டப்பட்டுள்ள தண்ணீர் கால்வாய், வடக்கு காணித்துண்டு 9ஆக காட்டப்பட்டுள்ள காணி, மேற்கு யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி தெற்கு காணித்துண்டு 12 ஆக அடையாளமிடப்பட்டுள்ள காணி. இங்கு குறிப்பிட்ட அனைத்தும் கே.511/197 இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சபையின் கட்டளைக்கு அமைய
இந்திராணி குணசேகர
*பி.பொ.மு. [சட்டம்]/ சபைச் செயலாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து கலாசார அலுவல்கள் முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

அமரர் மகேஸ்வரனின் துணைவியாரின் தாயார் மகேஸ்வரனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும், ''பத்திரிகையின் பார்வையில் மகேஸ்வரன்'', ''பாராளுமன்றம் காட்டிய புகழாரம்'', ''பாராளுமன்றத்தில் மகேஸ்வரன்'' ஆகிய மூன்று நூல்களையும் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் வெளியிட்டு வைக்க, ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம், யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் என்.ஜனக்குமார் ஆகியோர் நினைவுரை நிகழ்த்துவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை கடைசிப் படத்திலும் காணலாம். (250)

## சங்கானை பனை, தென்னை வள ஊழியருக்குப் பொருள்கள்

சங்கானை, டிசெ.23

சங்கானை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது ஊழியர்களுக்கு உணவுப் பொருள்களை இலவசமாக வழங்கியுள்ளது.

பணியாளர்கள் மற்றும் சங்க அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் தலா 12 கிலோ மா, 12 கிலோ அரிசி வீதம் வழங்கியுள்ளது.

500 இற்கும் மேற்பட்டோருக்கு இந்த இலவச நிவாரணம் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.தயாபரன் தெரிவித்தார். (203-29)

## நுளம்பைக் கட்டுப்படுத்த புகையூட்டும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த புகையூட்டல் நடவடிக்கையினை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையினை அந்தந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாக மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

## சுழிபுரம் காட்டுவயல் பகுதியில் நிறைந்துவழிந்த வெள்ளம் கடலுக்குத் திறந்துவிடப்பட்டது

சுழிபுரம்,டிசெ.23

சுழிபுரம் காட்டுவயல் பகுதியில் நிறைந்து வழிந்த வெள்ளம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் கடலுக்குத் திறந்து விடப்பட்டது. விவசாய சம்மேளனத்தினரின் ஆலோசனையுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வயல்களில் உள்ள வெள்ளம் கடலுக்குச் செல்லாதவாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சுழிபுரம் திருவடி நிலையில் இருந்து மாதகல் நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்துள்ள மதகுத் தடைகள் யாவும் விவசாய அதிகாரிகள் மேற்பார்வையில் கவனிக்கப்பட்டுவருகின்றன. (203-28)

## பதிவுகளை மேற்கொள்ள நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.23

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கு நாளை நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது. (203-236)

## வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அப்பகுதிக் கிணறுகளுக்கு குளோறின் போடப்படவுள்ளது

நல்லூர், டிசெ.23

'நிஷா' புயல், வெள்ளத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தெரிவு செய்து அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கு குளோறின் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் பாதிக்கப்பட்டுள்ள கொட்டடி, மீனாட்சிபுரம், நாவாந்துறைப் பகுதிகளில் இந்த நடவடிக்கை உடன் செயற்படுத்தப்படும் எனவும் நகரின் கடைத்தெருப் பகுதியில் ஏற்கனவே இதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று விட்டது என்றும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

நீர்விநியோக வடிகால் அமைப்புச் சபையின் உதவியுடன் இந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மோசமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள கிணறுகள், மலசலகூடம் என்பன வெள்ளத்தால் நிரம்பியும் மூடப்பட்டும் இருந்தன.

இப்பகுதிகளுக்கு உடன் குளோறின் போடவேண்டியுள்ளது.

ஏனைய பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கும் குளோறின் போட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாவனையில் உள்ள பொதுக்கிணறுகளில் பெரும்பாலானவை இறைக்கப்பட்டுள்ளன. வீடுகளில் உள்ள கிணறுகளை இறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

(203-111)

## சுழிபுரம் பகுதியில் நெல் நாற்று விற்பனை; பெருமளவானோர் கொள்வனவு செய்கின்றனர்

சுழிபுரம், டிசெ.23

சுழிபுரம் பகுதியில் நெல் நாற்று விற்பனை அமோகமாக நடைபெற்று வருகின்றது.

அதிக நாற்றுகள் நிறைந்த வயல் சொந்தக்காரர்கள் அவற்றைப் பிடுங்கி பயிர் தேவையானவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இவ்வாரம் நெற்பயிர்கள் முளை கொள்ளாத வயல் சொந்தக்காரர்கள் பயிர் நடும் கருமத்தைச் செய்து வருகின்றனர்.

மழை வெள்ளம் நிறைந்து நிற்கும் வயல்களில் நெல் நடுகையால் நல்ல பயன் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அதிக செலவையும் பொருட்படுத்தாது நெற் செய்கையில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

தொடர்ந்து தினமும் சில மணி நேரம் மழை பெய்வதும் நெல் நடுகைக்கு வாய்ப்பாக உள்ளது.

சுழிபுரம் பறாளைப் பகுதி பூராவும் உள்ள வயல்கள் யாவும் மழை வெள்ளத்தால் நிறைந்துள்ளது. (203-28)

## உள சமூக தொழில் வாண்மை கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

'துளிர்கள்' நிறுவனத்தின் உளசமூக தொழில் வாண்மை கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிக்கு க.பொ.த.உயர்தரத்துடன் சமூகசேவையில் ஈடுபாடுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

கற்கை நெறிக்கான விரிவுரைகள் சனி, ஞாயிறு மற்றும் வார நாள்களில் கற்க விரும்புவோருக்கு 2 நாள்கள் தனியான பிரிவாக நடைபெறவுள்ளன. ஒரு வருட காலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இவற்றுடன் ஆறு மாதங்கள் அடிப்படை ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி வகுப்புகளும் நடைபெறவுள்ளன.

அசர, அரச சார்பற்ற ஊழியர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்கக் கோரப்பட்டுள்ளது.

(201)

## கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.23

வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலி இராஜ வீதியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

## மாநகர சபையின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு பொதுமக்களே தடையாக இருப்பது கவலைக்குரியது

### ஆணையாளர் கூறுகின்றார்

நல்லூர்,டிசெ.23

யாழ்.மாநகர சபை தனது எல்லைக்குட்பட்ட வீதிகளில் கிடக்கும் கழிவுகளை விரைந்து அகற்றி சுற்றுச் சூழலைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அதன்மூலம் தொற்றுநோய் பரவும் அபாயத்தைத் தடை செய்வதற்கு முயற்சியும் செய்து வருகின்றது.

ஆனால், இச் செயற்பாடுகளுக்குப் பொதுமக்களே தடையாக இருப்பது வேதனையாக உள்ளது. பொதுமக்கள் தமது வீடுகளில் வெட்டும் மரக் கழிவுகளை தொடர்ந்தும் வீதிகளில் கொட்டுகின்றனர்.

இவ்வாறு கவலை வெளியிடுகின்றார் யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ.

வீதியோரங்களில் கிடக்கும் குப்பைகளை எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னதாக அகற்றி நக[illegible] வேண்டும் என்ற [illegible] பற்றாக்குறை இருந்தபோதும் ஊழியர்கள் சிரமத்தையும் பாராமல் வேகமாகத் தமது பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

வீடுகளில் சேகரிக்கப்படும் கழிவுகளைக் குறிப்பாக மரக் கழிவுகளை வீதிகளில் போடாது வைத்திருந்த மாநகர சபைக்கு அறிவித்தால் அவற்றை அகற்ற மாநகர சபை நடவடிக்கை எடுக்கும் என ஏற்கனவே அறிவித்துள்ளபோதும் பொது மக்கள் தொடர்ந்தும் மரக் கழிவுகளை வீதிகளில் கொட்டுகின்றனர். திட்டமிட்ட படி குப்பைகளையும் கழிவுகளையும் அகற்றுவதற்குப் பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் ஆணையாளர் கேட்டுள்ளார்.

(202-111)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நாய், பூனைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

உடுப்பிட்டி, டிசெ.23

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வளாகத்தினுள் நாய், பூனைகள் ஆக்கிரமிப்பால் நோயாளர், உத்தியோகத்தர், பார்வையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

[illegible] வைத்தியசாலை வளாகத்தில் மட்டுமல்லாது நோயாளர் விடுதியிலும் நோயாளர் உணவு உண்ணும் பகுதிகளிலும் நாய், பூனைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவற்றின் நடமாட்டங்கள் உத்தியோகஸ்தர்களோ, அதிகாரிகளோ கண்டுகொள்வதாக இல்லை என்று நோயாளர் விசனம் தெரிவிக்கின்றனர். உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(203-70)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியே கீழிறங்கி வந்தாலும் கூட எனது வெற்றியைத் தடுத்துவிட முடியாது

## சவால் விடுகிறார் எஸ்.பி.திஸநாயக்க

கண்டி, டிச.23

''மத்திய மாகாணசபைத் தேர்தலில் என்னோடு ஜனாதிபதி கீழே இறங்கி வந்து போட்டியிட்டாலும் அவரால் வெற்றிபெற இயலாது.''

- இவ்வாறு மத்திய மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட இருக்கும் முதன்மை வேட்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததன் ஊடாக கண்டி மக்களால் அவருக்கு சனிக்கிழமை அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

நான் கடந்த மூன்று, நான்கு வருடங்களாக சிறைப்படுத்தப்பட்டேன். பல துறைகளிலும் இதனால் நிறுத்தி வைக்கப் பட்ட எனக்கு எனது அரசியல் நடவடிக்கை களை முன்னெடுக்க வசதியாக உச்ச நீதி மன்றம் நீதி வழங்கியது. அதன் மூலம் எனது கரங்கள் இரண்டும் பலமாகி விட்டன. கால்கள் இரண்டும் வலிமை பெற்று விட்டன. மீண்டும் உயிர் பெற்று இப்பிரதேச மக்களின் மேன்மைக்காக பணிபுரிய சந்தர்ப்பம் கிடைத்திருப்பது நீதிமன்றத்தின் தீர்ப்பும் தெய்வாசீர்வாதமும் தான்.

மலையகம் எமது பாரம்பரிய பூமி. இங்கெல்லாம் அனைத்து இன மக்களும் சகோதரர்களாகவும் புரிந்துணர்வோடும் அமைதியாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வாழும் மக்களில் இந்திய வம்சாவளி மக்களின் வரலாற்றையும் நாம் கண்டு அறிவோம்.

அடிமைத்த னத்தில் சகல விதவசதிவாய்ப்புகளையும் உரிமைகளையும் இழந்த நிலையில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற வந்த வரே காலஞ் சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான். அன்னாரின் அயராத முயற்சியின் பிரதி பலனாகவே மலையக மக்களின் வாழ்க்கையில் ஓரளவு அபிவிருத்தியைக் காண முடிந்தது. அப்படியிருக்க இன்று! தொண் டமான் இத்தகைய மக்களின் கஷ்டங்களை ஒரு புறம் வைத்து விட்டு இந்தியாவில் ஏகபோக வசதிகளுடன் வாழ்ந்து வருகிறார். இதே போன்று தான் சந்திரசேகரனும். தங்களது சுயநலத்திற்காக அரசுக்குத் துணை போகிறாகள். இவாகளுககு தங்கள மககளைப பற்றி அக்கறையே இல்லை.



இவற்றுக்கெல்லாம் முன்மாதிரியாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். இராஜரட்ணம் இப்பொழுது எம்மோடு இணைந்து விட்டார். இவரைப் போன்றே சதாசிவம், திகாம்பரம் ஆகியோரும் எம்மோடு இருக்கிறார்கள்.

- என்று கூறினார்.

(சி)

## கலைவிழா

சுழிபுரம், டிசெம்.23

வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் கலைவிழா, சங்கத் தலைவி திருமதி ச.சிவரஞ்சினி தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி மேற்குப் பிரிவில் இயங்கும் அறுபத்திமூன்று பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இருபத்தொரு முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு கலந்து கொள்ளவுள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் செயல்திறன் கொண்ட கலைநிகழ்வுகள் மேடையேற்றப்படவுள்ளன. (203-28)

## கலந்துரையாடல்

நல்லூர், டிசெ.23

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலின் போது விளையாட்டுக் கழகங்களுக்கான புதிய அமைப்பு (யாப்பு) கோவை, அடுத்த ஆண்டுக்கான பிரதேச விளையாட்டு விழா, 2009ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்டப் போட்டிக்கான பிரதேச அணித்தெரிவு குறித்த விடயங்கள் தொடர் பாகக் கலந்துரையாடப்படவுள்ள தால் அனைவரை யும் சமூகம் தரு மாறு விளையாட் டுக் கழகங்களின் உறுப்பினர்களை பிரதேச செயலர் செந்தில்நந்தனன் கேட்டுள்ளார்.

(203-111)

## காசி காண்ட புராணப் படிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

பருத்தித்துறை பெரியவளவு வரத விநாயகர் ஆலய ஸ்ரீ வீரபத்திரர் கோயிலில் ஸ்ரீ காசி காண்ட புராணப் படிப்பு நடைபெற்று வருகிறது.

(202)

## 3ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர் K.K.செல்வநாயகம் (நீர்வேலி)

தோற்றம் 09.02.1948

மறைவு 23.12.2005

அன்பான வார்த்தைகளாலும்
அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து
அகிலத்தில் ஏற்றமுற வைத்த அப்பாவே...
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
எங்கள் இதயத்தில் என்றும்
அணையாத் தீபமாய் சுடர்வீசும் எங்கள் அப்பாவே!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறிடுமோ நம் துயரம்.

என்றும் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

சுவிஸ். (81053)

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டில்



பிறப்பு: 25 * 11 * 1940

இறப்பு: 17 * 12 * 2006

திதி: துவாதசி

அமரர் கந்தையா வேதநாயகம்

அன்பின் உறைவிடமே!
எங்கள் குடும்பத்தின் சிகரமே!
கண்ணிமைக்கும் பொழுதிலும்
தேடுகின்றோம் - உம்மை
காற்றாய்ப் பறந்ததேனோ!
காலங்கள் பல உருண்டோடி மறைந்தாலும்
உம் நினைவுகளை எங்கள் உயிர் உள்ளவரை
மறப்போமா அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'வங்கியடி'
இணுவில் கிழக்கு. (81070) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 * 07 * 1967



இறப்பு 04 * 01 * 2008

செல்வி சுகந்தி சுந்தரலிங்கம் (சுகந்தம்)

திதி: துவாதசி [23.12.2008]

எங்கள் மீது பாசத்தை காட்டிடவே
சுகந்தம் என்று ஆசையாக அழைத்தோம் - நீர்
அமரர் என்ற பெயர் தந்து
அவசரமாய் சென்றதேனோ?
விதி என்று வந்ததனால்
திதி இன்று வந்து
ஓராண்டு ஆனதுவே

அரசினர் வைத்தியசாலை முன்பாக,
சாவகச்சேரி.

என்றும் உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(80996)

## வீடுக்கிருத்திய அழைப்பு



அமரர் நாகமுத்து நாகலிங்கம்

மலர்வு 15.01.1935

உதிர்வு 24.11.2008

அன்புடனும் பாசத்துடனும் எமை
அணைத்து வளர்த்த தெய்வமே
பல் சுவைகள் நிறைவாக இணைந்து இருந்த
பாசத்திலே உங்கள் நினைவை எம்
நெஞ்சில் இருத்திவிட்டு - எம்
கண்களை ஏன் கடலாய் மாற்றிவீர்கள்
உங்கள் நினைவுடனே நாம் என்றும் ....

நாளை (24.12.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(81058)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் போர் சார் விளைவுகளும் எயிட்ஸ் பரவுவதற்கு ஏதுவாகின்றன

அத்தோடு யாழ்.குடாநாட்டினைப் பொறுத்தவரை பொழுதுபோக்கு அம்சங்கள், பொழுதுபோக்கக் கூடிய இடங்கள் அற்ற நிலையே காணப்படுகின்றது. பெரியளவிலான பூங்காக்களோ, கடற்கரை ஓரங்களோ, விடுதிகளோ அற்ற நிலையே காணப்படுகின்றது. இவையும் மக்கள் பாலியல் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடக் காரணமாக அமைகின்றன.

**போர் தரும் விளைவுகள்**

எமது குடாநாட்டினை எடுத்துக்கொண்டால் கடந்த 2 தசாப்தங்களாகப் போர் என்பது எமது வாழ்வியலோடு இணைந்த அம்சமாக மாறிவிட்டது. இடப்பெயர்வும் அகதிமுகாம்களும் இறப்புக்களும் எமக்கு சாதாரண விடயமாகி விட்டன. போரும் போர் சார் விளைவுகளும் HIV/AIDS பரவலுக்கு ஏதுவாக அமைகின்றன. போரினால் இடம்பெயரும் மக்கள் ஒன்றாக அகதி முகாம்களில் வாழும் நிலை காணப்படுகின்றது. இங்கு பாலியல் என்பது அந்தரங்கமாக அறைகளில் நடைபெறாது பலரும் பார்வையிடக்கூடியதாக அமைகின்றது. இவற்றால் சிறுவர்கள் பாலியல் பிறழ்வு நடத்தைகளில் ஈடுபடத் தூண்டப்படுகின்றார்கள். மக்கள் கூட்டாக வாழ்வதனால்

> சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் திறந்த கட்டுரைப் போட்டியை நடத்தியது.
>
> 'எயிட்ஸ்' குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக நடத்தப்பட்ட அந்தப் போட்டியில் பரிசில் பெற்ற முதல் மூன்று கட்டுரைகளில் ஒன்றின் முற்பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியது. இறுதிப் பகுதி இங்கு தரப்பட்டிகிறது.

பலருடன் பாலியல் உறவு கொள்வதற்கும் பாலியல் வல்லுறவுகள் இடம்பெறவும் வாய்ப்புக்கள் அமைகின்றன.

அத்துடன், போரின் விளைவினால் பல இளம் விதவைகள் உருவாகிய வண்ணம் உள்ளனர். சிலர் தமது பாலியல் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் வறுமை காரணமாகவும் பிறருடன் பாலியல் உறவில் ஈடுபடுகின்றனர். வறுமை காரணமாகப் பல விலை மாதர்கள் உருவாகின்ற நிலைமை காணப்படுகின்றது. அத்தோடு பல பெண்கள் பலதரப்பினராலும் பாலியல் வல்லுறவிற்கு உட்படுகின்ற நிலைமையும் இடம்பெறுகின்றது.

**சிறுவர் துஷ்பிரயோகம்**

அத்தோடு, போரினால் பல அனாதைக் குழந்தைகளும் அதன் தொடர்ச்சியாக சிறுவர் பராமரிப்பு இல்லங்களும் தோன்றிய வண்ணம் உள்ளன. சிறுவர் இல்லங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று சிறுவர் இல்லங்கள் மூடப்பட்ட நிலைமையும் நிர்வாகிகள் கைது செய்யப்பட்ட நிலைமையும் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றன. அத்துடன் சிறுவர்கள் தமக்குள் பாலியல் பிறழ்வு நடத்தைகளில் ஈடுபடவும் சிறுவர் இல்லங்கள் வாய்ப்பாக அமைகின்றன.

அத்தோடு, முறையற்ற கர்ப்பம், தேவையற்ற கர்ப்பம் போன்றவற்றினை அழிப்பதற்கு இலங்கையில் சட்டமற்ற நிலையில் முறையற்ற கருக்கலைப்புக்கள் நாட்டு வைத்தியர்கள் மூலம் இடம்பெறுகின்றன. இங்கு ஒழுங்காக தொற்றுநீக்கப்படாத கருக்கலைப்பு சாதனங்களின் மூலம் HIV/AIDS பிறருக்கும் பரவக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

அத்துடன், இங்கு பாலியல் வெளிப்படையாகப் பேசப்படுவது குறைவாக காணப்படுவதனால் பலருடன் பாலியல் தொடர்பு வைக்கும் சந்தர்ப்பங்களில் ஆணுறை அணிவது, அதனைப் பயன்படுத்துவது பற்றிய அறிவற்ற நிலையே காணப்படுகின்றது. கூடுதலாக இங்கு மருந்துக்கடைகளில் பெண் பணியாளர்கள் காணப்படுவதனால் அதனை வாங்குவதில் தயக்கம் காணப்படுகின்றது. திருமணமாகாதோர் இதனை வாங்கும்போது தனது நடத்தை மற்றையோருக்குத் தெரிந்துவிடும் என நினைத்து வாங்காது தவிர்த்தல், ஆணுறை உச்சக்கட்ட இன்பத்தினைத் தராது, அருவருக்கத்தக்க உணர்வைத் தருகின்றது போன்ற பிழையான எண்ணப்பாங்குகளால் ஆணுறையைத் தவிர்த்து வருகின்றனர். அத்துடன் பெண்கள் ஆண்களை ஆணுறை அணியுமாறு வலியுறுத்த துணிவற்றவர்களாகவும் உள்ளனர். இத்தகைய பல்வேறு காரணங்கள் HIV/AIDS குடாநாட்டில் பரவ ஏதுவாக அமைகின்றன.

**பரவாது தடுப்பது எப்படி**

நாம் HIV/AIDS பரவாது தடுப்பதற்கான

## பொதுமக்கள் சகலரும் அறிந்திருக்கவேண்டிய முக்கிய விடயங்கள்

அணுகுமுறைகளை நோக்கில் ABC செய்தி முறை எமது குடாநாட்டிற்கும் பொருத்தமாகவுள்ளது.

A - Abstinence - விலகியிருத்தல்/தவிர்த்தல்.

அதாவது திருமணமாகும் வரை உடலுறவினைத் தவிர்த்தல். இத்தோடு ஊசி மூலம் போதைப்பொருள் பயன்படுத்துவதிலிருந்தும் மக்கள் விலகியிருக்கவேண்டும் என்பதன் அடிப்படையிலும் இச்செய்தி தெரிவிக்கப்பட்டது.

B-Be faithful - பிரமாணிக்கமாக இருத்தல்.

திருமணத்தின் பின்பு கணவன் மனைவி இருவரும் கற்பு ஒழுக்கமாகப் பிறருடன் பாலியல் தொடர்பு கொள்ளாது இருத்தல்.

C-Condom Use - ஆணுறை பாவித்து பாதுகாப்பான உடலுறவு கொள்வது பற்றிக் கூறப்படுகின்றது.

இவ் ABC செய்திமுறையில் சில குறைபாடுகள் காணப்படுவதால் SAVE எனும் புதிய செய்தி உருவாக்கப்பட்டுள்ளது. இவையும் எமக்குப் பொருத்தப்பாடானதாக அமைகின்றன.

S-Safer practices - பாதுகாப்பான நடைமுறைகளைப் பின்பற்றல்

✱ பாலியல் உறவில் பாதுகாப்பான நடவடிக்கைகளை பின்பற்றல்

✱ HIV தொற்றற்ற குருதிப் பரிமாற்றத்தினை உறுதிப்படுத்தல்

✱ உடலில் செலுத்தப்படும் ஊசியின் தொற்றற்ற நிலையை உறுதிப்படுத்தல்

✱ HIV தொற்றுடைய தாய் பிரசவிக்கும் குழந்தை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்

A-Available Medication - மருத்துவ உதவிகளைத் தாமே தேடிப் பெறல். எந்த வித தயக்கமும் இன்றி மக்கள் தாமே போதனா வைத்தியசாலைகளில் பரிசோதிக்கின்ற, சிகிச்சையை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

V-Voluntary Counseling and Testing (VCT) - தானாக முன்வந்து ஆலோசனை பெற்று குருதிப்பரிசோதனை செய்தல்.

E-Empowerment through education - கல்வி/விழிப்புணர்வுக்கூடாக மக்கள் தாமாகவே எயிட்ஸ் தொடர்பான அறிவினைப் பெறவேண்டும். விழிப்புணர்வினை மாதர் சங்கங்கள், கமநல சங்கங்கள் போன்ற சங்கங்கள், பாடசாலைகள், ஆலய சொற்பொழிவுகள் போன்ற பாமர மக்களும் கூடும் இடங்களில் மேற்கொள்ளுதல் வேண்டும். தன்னார்வத் தொண்டர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றில் ஈடுபட வேண்டும்.

**அவசியமான செயற்பாடுகள்**

அத்தோடு பாமர மக்களிடையே எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் சமநிலை (முன்மாதிரி) கல்வியாளர்களை (Peer Educators for Pervention and control of HIV/AIDS) தோற்றுவிப்பது அவசியமாகின்றது. சமநிலை கல்வியாளர் என்பவர் கூடவே வேலைசெய்வோராகவும், நண்பராகவும், சாதாரண நபராகவும் இருப்பர். கூடுதலாகப் பாலியல்சார் அந்தரங்கங்களை நண்பர்களுடனேயே கூடுதலாக பகிர்கின்றனர். ஆகவே தன்னார்வம் மிக்க சமநிலை கல்வியாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குப் பயிற்சி வழங்கி அவர்களூடாக எயிட்ஸ் சார் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் தாக்கவிளைவு கூடியதாக அமையும்.

**பாலியற் கல்வியின் முக்கியத்துவம்**

வயது வந்த இளைஞர், யுவதிகள் அதிக பாலியல் நாட்டம் கொண்டவர்களாக இருப்பினும், தங்களது திருமண வாழ்விற்கு உட்படும் வரை, பாலியலைப் (நேரடியான) பின்போடுதல் அல்லது தவிர்த்தல் சாலச்சிறந்தது. அவர்கள் தக்க தருணத்தில் எடுக்கின்ற தீர்மானங்களே HIV யையோ அல்லது வேறு சமூகச் சிக்கல்களையோ தவிர்க்க வல்லவையாக உள்ளன. தீர்மானம் எடுக்கும் திறனை (Decision Making) வளர்த்தலே இதனுடைய உட்பொருளாகும். இதை வீட்டு மட்டத்திலோ அல்லது பாடசாலை, கல்லூரி பல்கலைக்கழக மட்டத்திலோ பயிற்றுவிக்கப்பட்டு, ஆளுமை வளர்ச்சியடைகின்ற பொழுது, இது மிக எளிதாகிறது. சிலவேளைகளில், அதாவது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் ஆணுறை, பெண்ணுறை அணிவதற்குக்கூட உதவி புரியும். எனவே, பாலியல் அனுபவம் பெறமுன் பாலியற்கல்வி பாடசாலை மட்டத்திலோ அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலோ வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சட்டத்தாலும், சமூக, சமய கலாசாரங்களாலும் திருமண பந்தத்திற்குள் நுழைபவர்கள் இறுதி வரை தங்களது பாலியல் நடவடிக்கைகளை, தம் மனைவியுடனோ அல்லது கணவனுடனோ



மணிவாசகன் நிமலன்,
நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகம்.

மட்டுமேவைத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற தீர்மானிக்கும் திறனைக் கொண்டிருத்தலுடன், ஏனைய HIV/AIDS இற்கு எதிரான வாழ்க்கைத் திறன்களையும் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், துரதிஷ்டவசமாக திருமண பந்தம் பாதிப்புறும் வேளையிலும்கூட தாங்கள் சிறந்த தீர்மானம் எடுப்பவர்களாக இருப்பதுடன், பாலியலை பாதுகாப்பானதாக பேணுவதும் HIV/AIDS ஐத் தடுக்க வல்லது.

பாலியலை வியாபாரமாக, வர்த்தக நோக்குடன் செயலாற்றும் இருபாலாரும் கூட எந்தச் சந்தர்ப்பத்திலும் HIV தொற்று ஏற்படாத வகையில் தங்களது பாலியல் செயற்பாடுகளை வைத்துக்கொள்ளல் வேண்டும். அதாவது ஒவ்வொரு பாலியல் நடவடிக்கையின்போதும், ஆணுறை அல்லது பெண்ணுறை சரியாக அணிந்திருத்தல் வேண்டும். அதாவது, பாதுகாப்பின்றிய பாலியல் நடைபெற இடமளிக்கக்கூடாது. விலைமாதர்களுக்கான பிறதொழில்களை வழங்கி அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையாய கடமையாகும். ஆணுறை அல்லது பெண்ணுறைகளை மக்கள் இலகுவாகவும் அவர்களின் அந்தரங்கம் பாதிக்கா வண்ணமும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்தல் நன்று. உதாரணமாக இரவுவேளைகளில் தனியாக செல்லல், சனநடமாட்டமற்ற இடங்களுக்கு தனியாகச் செல்லல்.

ஆகவே இக்கட்டுரையினூடாக யாழ்.குடாநாட்டில் HIV/AIDS ஐ தூண்டக்கூடிய சமகால மாற்றங்களையும் அவற்றினைத் தடுப்பதற்கான வழிவகைகளையும் நோக்க முடிகின்றது. "வருமுன் காப்போம்" எனும் கோட்பாட்டிற்கிணங்க எயிட்ஸ் தனது அகலக் காலை விரிக்க முன்பே நாம் விழிப்படைந்து இவ்வுலகிலிருந்தே முற்றாக இக் கொடிய அரக்கனை நீக்குவோமாக. *(முற்றும்)*

---

# மாத்தளை ஐ.தே.க. அலுவலகம் மீது இனந்தெரியாத கும்பல் தாக்குதல்!

மாத்தளை, டிச. 23

மாத்தளை, கலேவெல பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது நேற்றுக்காலை இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது என்று ஐ.தே.கவின் மாத்தளை மாவட்ட எம்.பி. ரஞ்சித் அலுவிகார தெரிவித்தார்.

குறித்த இடத்திற்கு இலக்கத்தகடு இல்லாத மூன்று வான்களில் வந்து இறங்கிய கும்பல் அலுவலகத்தின் பெயர்ப்பலகையை அடித்து நொறுக்கியது என்றும் அவ்வேளை அருகில் பொலிஸ் ஜீப் ஒன்று நின்றபோதிலும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் ரஞ்சித் அலுவிகார தெரிவித்தார்.

இச்சம்பவத்தைக் கண்ணால் பார்த்த எவரும் பயம் காரணமாக சாட்சியமளிக்க முன்வர மறுக்கிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

ஏற்கனவே இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கும், மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார். (சி)

# நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு குறைந்த விலையில் குளிர்பானம் விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.23

நத்தார், புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடமாடும் விற்பனை நிலையம் மூலம் குளிர்பானங்களை குறைந்த விலையில் நுகர்வோருக்கு விநியோகித்து வருவதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாள்களாக இச்சேவை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

ஒன்றரை லீற்றர் குளிர்பானப் போத்தல் ஒன்று 90 ரூபா விலையில் விநியோகிக்கப்பட்டது.

விலை குறைப்புச் செய்யப்பட்டு விற்கப்படும் இந்த குளிர்பானங்களைச் சங்க கிளைகளிலும் மக்கள் பெற்றுக் கொள்ள முடிந்தது.

(203-224)

# பெற்றோல் விலையை உடன் குறைக்காவிடின் அது மேலும் பாரிய சிக்கலையே உருவாக்கும்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ

கொழும்பு, டிச. 23

பெற்றோல் விலையை உடனே குறைக்க வேண்டும் என்று ஜே.வி.பி. தலைவர் சோம வன்ஸ அமரசிங்க அரசை வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பவை வருமாறு:-

தற்போதைய எரிபொருள் சிக்கலுக்கு அரசுதான் காரணமாகும். எனவே, பெற்றோலின் விலையை உடனடியாகக் குறைக்கவேண்டும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாது போனால் மேலதிகமான பிரச்சினைகளை அது ஏற்படுத்தும்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக் கவே மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைநாம் ஆதரித்தோம்.

ஆனால், சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஐ.தே. கவின் கொள்கைகளைத் தூக்கிப் பிடிக்கின்றன.

மஹிந்த அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத நிலையில் மக்களின் வாக்குகளை எப்படி சுதந்திரக் கூட்டமைப்பால் கோரமுடியும்?

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர்வைக் கூட இந்த அரசால் ஒழுங்காக நடத்த முடியவில்லை. ஒவ்வொரு விடயத்திலும் அது ஒழுங்கீனமாகவே நடந்து கொண்டுள்ளது. எனவே,இந்த அரசு விரைவில் கவிழும்.

ஏற்கனவே, 300 கோடி ரூபா வீணாகிவிட்ட நிலையில், மிகின் ஏயர் நிறுவனத்துக்காக மேலும் 600 கோடி ரூபாவை செலவிடுவதால் என்ன பயன்? பெருந்தொகையான பணத்தை வீணடிப்பதை விட்டுவிட்டு மக்கள் நலன் திட்டங்களுக்கு அவற்றை பயன்படுத்த வேண்டும் - என்றார் சோமவன்ஸ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் தவறிழைத்த சிங்களத் தலைமைகளின் அடியொற்றியே மஹிந்தரும் செயற்படுகின்றார்

அண்மைக் காலமாக அரசின் மார்தட்டல்களுக்கு எடுபட்டுத் தென்புலத்தின் பெருமளவிலான மக்கள் தமது இருப்பிடங்கள் தோறும் சிங்களக் கொடிகளைப் பறக்கவிட்டிருக்கக்கூடும். அந்த வகையில், இந்த வங்குரோத்து அரசு நாட்டு மக்களுக்கு விடுத்துநிற்கும் கோரிக்கை, தேசப்பற்று என்ற மதுவை அருந்தி, இதயத்தில் அதை ஆழப்பதித்து அதைக் கொண்டாடி மகிழ்ந்து, வாழ்க்கைச் செலவின உயர்வு, வேலைவாய்ப்பற்ற நிலை, பாரிய அளவில் நிகழும் நிர்வாக ஊழல்கள் மற்றும் சமுதாயம் ஏற்கனவே மறந்து போயுள்ள மனித உரிமை மீறல்கள் போன்றவை பற்றிப் பேசுவதைக் கைவிடுங்கள் என்பதாகவே உள்ளது.

### தேசப்பற்று

நாடொன்றில் மக்கள் அவலப்பட்டு - துன்புற்று அல்லாடி நிற்கும் சந்தர்ப்பங்களில் தேசப்பற்றைக் கிளர்ந்தெழச் செய்தல் - உசுப்பிவிடுதல் என்பவை அரசியல் வரலாற்றில் புதிய விடயமொன்றல்ல. அது ஜூலியஸ்ஸீஸரின் காலத்திலிருந்தே இடம்பெற்று வந்துள்ளதொரு அரசியல் விளையாட்டேயாகும். தேசப்பற்று அல்லது தேசாபிமான உவகையென்பது இருபக்கமும் சாணை தீட்டப்பட்ட கூர்வாளுக்கு ஒப்பானதாகும். அது மனிதனது இரத்தத்தைச் சூடேற்றிவிடும் - அதேசமயம் மனிதனது புத்தியைக் குறுகச் செய்துவிடும்ஒன்றாகும். போர் முரசம் ஒலிக்கும் வேளையில் இரத்தம் கலங்கி, நெருப்புப் பற்றி, குரோதம் என்ற தீ நாக்குகள் கொழுந்துவிட்டெரியும்போது மனித புத்தி நித்திரையாகிவிடுகிறது. அந்தவேளையில் அரசியல் தலைவர்கள் குடிமக்களது உரிமைகள் பற்றிக் கவனத்தில் கொள்வதில்லை - பீதியால் உறைந்துபோதல் மற்றும் தேசாபிமான உவகை

## அரசின் இராணுவ நடவடிக்கைக்கு ஐ.தே.கவும் ஆதரவு அளிக்கிறதா?

யினால் மதிமயங்கிப்போகும் வேளையில் மனிதர்கள் தமது தலைவருக்காகத் தமது அனைத்து உரிமைகளையும் காற்றில் பறக்கவிட்டு விடுகின்றனர்.

### ஞானசூன்யம்

இந்நாட்டின் வரலாறு முழுவதிலும் ஞான சூனியமான அரசியல்வாதி யொருவராகவே மஹிந்த ராஜபக்ஷ களமிறங்கியுள்ளார். ஆனாலும், அவரது பரம எதிரிகூட அவரை ஞானசூன்யம் என ஒருபோதும் எண்ணமாட்டார். என்றாலும், நாட்டின் பொருளாதாரம் சிதைந்து - சரிந்து வரும் நிலையில், அதனை உணர்ந்துகொள்ளாத்தன்மை மற்றும் வீண் விரயத்தாலும் ஊழல்களாலும் அனைத்தும் கபளீகரம் செய்துகொள்ளப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில்தான், அவர் தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக ஏகாந்தமாகவே தீர்மானித்து இராணுவ நடவடிக்கையொன்றைக் களமிறக்கியுள்ளார். பெரும்பாலான சிங்கள மக்களைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களைத் துரத்தித்துரத்தித் தாக்குவதற்கு ஒப்பான மகிழ்ச்சி வேறொன்றும் இருக்கமுடியாது. வடக்கிலும் கிழக்கிலும் தரைப்பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் பயணிக்கும் அரசின் இரும்புச் சப்பாத்து அடிகள் அவ் இரு பிரதேசங்களினதும் மக்களை அடிமைப்படுத்திக்கொண்டுள்ளது.

**சிங்கள மூலம்: ரவீந்திர ரணசிங்க**

ஆனால், கருணாவின் கருத்துக்கு அமைய, கிழக்கு மாகாணமென்பது எந்தவொரு பாதுகாப்பும் அற்றதொரு பிரதேசமேயாகும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, அங்கு மிகப் பாரதூரமான விதத்தில் உடைந்து துண்டாகிப் போயுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பு அங்கு மீளவும் ஊடுருவிப் பெரும் பீதியையும் ஏற்படுத்திவிட்டுள்ளது. மேலும், தமிழர்களது பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்கத் திராணியற்ற அரசொன்றால், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு மனிதாபிமான ரீதியில் கிட்டியுள்ள பெரும் பலத்தைச் சிதைத்து விடுவதென்பது இலேசானதொரு கருமம் அல்ல. ஆனாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எத்தனத்துக்கு அமைய, எஞ்சியிருப்பதாகக் கருதப்படும் 5 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களையும் நிர்மூலமாக்கிவிடும் தமது திட்டத்தை நிறைவேற்றி முடிக்க, 117 ஆயிரம் கோடி ரூபாவை அவர் அடுத்த ஆண்டில் செலவழிக்கக்கூடும்.

அதாவது ஒரு விடுதலைப் புலிப் போராளியை அழித்தொழிக்க அரசு பெருமளவு நிதியைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இத்தகையதொரு பெரும் நிதித்தொகையை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்திக்காகச் செலவழிக்க இயலாதது ஏன் - என்ற வினா எழும்பும் அதே சமயத்தில் வரவேற்கத்தக்கதொரு அரசியல் தீர்வுப் பொதியொன்றும் அரசால் முன்வைக்கப்படும் பட்சத்தில், மக்கள் ஒத்துழைப்பு என்ற ஆதரவு கிட்டாது விடுதலைப் புலிகள் தனிமைப்படுத்தப்படக் கூடும். அதேபோன்று, வயது குறைந்த சிங்களச் சிப்பாய்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்காக உயிர்பிழைத்திருக்கும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டும்.

### குண்டுகளுக்குச் செலவழிக்கப்படும் தொகை

சிங்கள இராணுவம் மிகச் சரியானதொரு மனோபாவத்துடன் செயற்படுமானால், வடபுலத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் கருமம் இலகுவானதாக அமையலாம். அந்தவகையில் நிலப்பிரதேசத்தைக் கைப் பற்றிக் கொள்வது தொடர்பான கருமத்துக்கு குண்டுகள் மற்றும் ரவைகள் மட்டுமே தேவைப்படும். இவ்வாறு ஒரு நாளுக்கு பெருந்தொகை நிதியைச்செலவழித்து வெகுவிரை வில் வடபுலத்தைக் கைப்பற் றிக்கொள்ள அரசால் முடியக்கூடும்.

எம்முள் எழும் தற்போதைய வினா அதையடுத்து நிகழப் போவது என்ன - என்பதேயாகும். அதாவது, கிழக்கு மாகா



ணத்தில் இடம்பெற்றமை போன்று வடபுலத்திலும் சிங்களப் படைகளின் தொடர் முகாம்களை நிறுவ முடியு மேயல்லாது அரசால் நிறைவேற்றி முடிக்கக்கூடியவேறு எதுவும் இருக்கமுடியாது. அதனூடாகத் தமிழ் மக்களை மௌனிக்கச் செய்வதையே அவர்களால் நிறைவேற்ற முடியலாம். அந்த வகையில் ஆள் கடத்தல்கள் மற்றும் படுகொலைகளை நிறுத்துவதன் மூலம் அனைத்துத் தமிழ் மக்களதும் வாய்களை மூடிவிடு வதற்கு அவர்கள் எத்தனிக்கக்கூடும். ஆனாலும், தமிழ் மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட மாட்டார்கள்.

### மஹிந்தவுக்கு எதிரான சவால்

மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்த வரையில் கிழக்கு மாகாணத்தை யொத்ததாகவே மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சவால் விடுக்கும் தமிழ் இராச்சியமொன்று கிழக்கில் போன்று வடபுலத்திலும் நிர்வாகம் செலுத்தக்கூடும். மஹிந்த ராஜபக்ஷவோ தமிழ் போராளிகளை ஜனநாயக நீரோட்டத்தில் இழுத்து விடுவது பற்றியே இடையறாது கூறி வருகிறார். 1883ஆம் ஆண்டில் பிரதிநிதித்துவ அரசொன்று நிறுவப்பட்டது முதல் 1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்தது வரையில் தமிழ் இனத் தவர்கள் எவ்வாறு செயற் பட்டுள்ளனர் என்பது குறித்து மஹிந்த ராஜபக்ஷ ஒரு கணமே னும் சிந்தித்திருப்பாரா? அவர் கள் பயணித்து வந்தது ஜனநாயக அரசியல் நீரோட்டமே யாகும்.

தமிழனத்தின் தலை மைத்துவம் அன்று நடு நிலை நின்று ஜனநாயக அரசியல் நீரோட்டத்தைக் கைக்கொண்டிருந்த போதும்கூட, 1958 மற்றும் 1983 இல் ஜீரணித்துக்கொள்ள இயலாத நிகழ்வுகள் நிகழ்ந்தன. அவர்கள் கண்கூடாகக் காணும் விதமாகவே 1956இல் இந்நாட்டில் சிங்களம் மட்டுமே அரசமொழியென்ற மறுசீரமைப்பு களமிறக்கப்பட்டது.

இவை அனைத்துக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு என்றே வரையறையற்ற விதத்தில் இவற்றை மையப்படுத்திக் கொடுத்த சிங்கள அரசியல் தலைமைத்துவமே காரணமாக அமைந்தது.

### ஐ.தே.கவின் ஒத்துழைப்பு எப்படி?

இந்நிலையில், எதிரணியின் செயற்பாடு எத்தகையது - எனவும் வினா எழுப்பவேண்டியுள்ளது. ஐ.தே.கட்சியினர் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்களாயின் அவர்களும் கூட மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மேடையில் சரணாகதி அடையக்கூடும். அத்தகைய நிலையில் ஐ.தே.கட்சியில் எஞ்சியிருக்கும் 42 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட, அரசுடன் இணைந்து கொள்ளக்கூடும்.

ஆனால், ஐ.தே.கட்சி யுத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வராதிருக்குமானால், அதற்கான காரணங்களையும் கூட அக்கட்சி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தி நிற்பது பெறுமதிமிக்கதாகும்.

இவற்றிடையே, ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தரான திஸ்ஸ அத்தநாயக்கவோ குழம்பிப்போயுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் இனச்சிக்கலுக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது எனக் கூறும் அவர் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அரசின் இராணுவ வெற்றியொன்றின் போது, இராணுவ வீரர்களை வாழ்த்தி நிற்கிறார். அந்த வகையில் அவரது நடைமுறைப்போக்கு தெளிவற்றதாகவே காணப்படுகிறது. இவற்றிடையே, மங்கள சமரவீரவோ தமது போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதும் புலப்படுகிறது. ஆனாலும், [illegible] மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் [illegible] பிரசாரங்களுக்கு எதிராகப் பாரிய செயற்றிட்டமொன்றைக் களமிறக்கியுள்ளதும் தெரிகிறது.

### தம்பட்டம் அடிக்கும் மஹிந்த அரசு

அரசு தரப்பினரின் கருத்து வெளிப்பாடுகளுக்கு அமைய, இற்றைவரையில் விடுதலைப்புலிகள் அமைப்பு பலநூறு தடவைகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கூறிக் கொண்டு தம்பட்டமடித்துக்கொண்டு இந்த யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதென்பது எந்தவிதத்திலும் நியாயமானதல்ல. அது, இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் மருந்தாகமாட்டாது. எனவே, நாட்டின் பிரதானமான அரசியல் நீரோட்டத்திலிருந்து புறமொதுக்கப்பட்டுள்ள சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாஷைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மதிப்பளித்து அரசியல் தீர்வு யோசனையொன்று முன்வைக்கப்படுவது அவசியமானதாகும்.

இலங்கையின் அரசியல் கட்சிகள், தேர்தல் வாக்குகளைச் சம்பாதித்துக்கொள்வதையே தமது குறிக்கோளாக்கிக் கொண்டுள்ளதன் காரணமாக, அவர்களால் நாட்டின் தேசியப் பிரச்சினையின் மூலக்கருவை இனங்கண்டுகொள்ள முடியாதுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்தனாவின் அரசு பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி மேற்கொண்டிருந்த வேளையில்தான் பெரும்பாலான சிங்களவர்கள் 1983 ஆம் ஆண்டில் இந் நாட்டின் தமிழர்களை பூண்டோடு ஒழித்துவிடும் விதத்தில் செயற்பட்டனர். இது தமக்குத் தாமே சவக்குழி தோண்டுவதற்கு ஒப்பானதே என்பதை ஜே.ஆர்.ஜயவர்தன உணரத் தலைப்பட்ட வேளையில், காலம் கடந்து விட்டிருந்தது அல்லது வெள்ளம் கரை மீறச் சென்றுவிட்டிருந்தது.

எவ்வாறோ, 1958 ஆம் ஆண்டின் தமிழர் அழிப்பு இடம்பெற்று 25 ஆண்டுகள் கடந்த அன்றைய சந்தர்ப்பத்திலும் ஜே.ஆர்., வரலாற்றிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக 25 ஆண்டுகளுக்குப் பின்னர் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழர் அழிப்பு, வன்முறையின் உச்சத்தை எட்டி உன்மத்தம் கொண்டு ஆடியது.

### உயிரிழக்கும் இராணுவச் சிப்பாய்கள்

இன்று, விடுதலைப்புலிகளுடனான போரில் சிங்களச் சிப்பாய்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்து வருகின்றனர். ஆனாலும் சிங்களப் பௌத்த இதயங்களுக்கு அவை பற்றிய ஞாபகங்கள் இன்று இல்லை. தப்பித்துச் செல்வதற்கு ஆற்றல் படைத்தோர் எவ்வாறோ தப்பித்தும் செல்கின்றனர்.

தமது சகோதர குடிமக்களான தமிழ் மக்களுக்கு எதிரான எந்தவொரு குரோதமோ காழ்ப்புணர்வோ சிங்கள மக்களிடத்தில் இல்லையென்பதாகவே மஹிந்த ராஜபக்ஷ உலகத்தார் முன்னிலையில் காட்ட முனைகிறார். அதற்காக ஐ.நா. சபையில் அவர் தமிழ் மொழியிலும் பேசிக் காட்டினார். ஆயினும் இன்றைய அளவில் விடுதலைப்புலிகள், மஹிந்த ராஜபக்ஷவைப் பெரும் இக்கட்டில் சிக்கவைத்துள்ளனர். ஆதலால் விடுதலைப்புலிகளை அழித்தொழித்து விடுவதென்பது அவரது குறிக்கோளாகியுள்ளது.

### தமிழ் ஊடகவியலாளர்களின் நிலை

இன்றைய நிலையில், இலங்கையில் வாழும் தமிழினம் கடும் சந்தேகக் கண்கொண்டு நோக்கப்படுகிறது. தமிழ் ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். எச்சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டைகளுடன் நடமாட

## சிறுபான்மையினர் எதிர்பார்க்கும் தீர்வை அரசு முன்வைக்குமா?

வேண்டிய நிலைக்கே தமிழ்மக்கள். தள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளில் அவர்கள் தொந்தரவுகளை எதிர்கொள்ள வேண்டி நேர்கின்றது.

**தமிழில்:சரா**

அண்மையில் பூநகரி அரச படைகள் வசமான சம்பவம் மஹிந்த அரசைப் பொறுத்த வரையில் நாடடொன்றைக் கைப்பற்றிக் கொண்டதற்கு ஒப்பான உவகையை அளித்திருந்தது. நாடு முழுவதிலும் சிங்கக்கொடியைப் பறக்கவிட்டு வெற்றியைக் கொண்டாடுமாறு பணிக்கப்பட்டிருந்தது. சிங்கள மக்களில் ஒரு சாரார் மஹிந்த ராஜபக்ஷவின் போர் வெறி மனோபாவத்துக்கு ஏமாந்து போகாது, தமது தமிழ்ச் சகோதரர்களின் அவல நிலையை நல்லெண்ணத்துடன் நோக்கி சிங்கக் கொடியைப் பறக்கவிடுவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

### சம்பிக்க ரணவக்க போடும் தாளம்

எவ்வாறான போதிலும், சம்பிக்க ரணவக்கவின் தாளத்துக்கு ஏற்ப ஆடும் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையென்ற நாடு சிங்கள மக்களின் தாயகபூமியே என்ற நிலைப்பாட்டுடன் யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்கக்கூடும்.

ஆயினும் யுத்தமொன்றின் மூலம் தமிழ்மக்களது சுதந்திர உணர்வை அடக்கி அடிமைப்படுத்திவிட இயலாது. ஏனெனில் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்குத் தமிழ் மக்கள் காயப்படுத்தப்பட்டு துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் அவர்கள் சாகடிக்கப்படவில்லை. என்றாலும் அவர்கள் என்றோ ஒருநாள் மீண்டும் தலை நிமிர்ந்து உரிமைக்காகப் போராட முயலக்கூடும். இந்தச் சவாலை வெற்றிகொள்ள வேண்டுமானால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களுக்கு மதிப்பும் கௌரவமும் வழங்கி நியாயமான அரசியல் தீர்வொன்றினை அவர்களுக்கு வழங்கமுன்வர வேண்டியது அவசியமாகும்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் எயிட்ஸ் தின நிகழ்வுகளும், எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸ் உரையாற்றுவதையும் போட்டியில் வெற்றிபெற்ற ஒருவருக்கு 'வேள்ட் விஷன்' நிறுவன யாழ்.கிளை திட்டமிடல் பணிப்பாளர் த.வசந்தநாயகம் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தரை மூன்றாவது படத்தில் காணலாம்.

### டிசெம்பர் மாதத்துக்கான

# சமுர்த்தி, இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.23

டிசெம்பர் மாதத்துக்கான சமுர்த்தி மற்றும் இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகம் தற்போது இடம்பெற்று வருகின்றது.

சமுர்த்தி நிவாரணத்துக்கு அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்களும், இடம்பெயர்ந்தோர் நிவாரணத்துக்கு சிவப்பு நாட்டரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்களும் விநியோகிக்கப்படவுள்ளன. நிவாரணப் பொருள்களின் விவரம் வருமாறு: (M-அங்கத்தவர் எண்ணிக்கை)

**இடம்பெயர்ந்தோர் நிவாரணம்**

| | | 1M | | 2M | | 3M | | 4M | | 5M | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| சிவப்பு நாட்டரிசி | 63.00 | 2.900 | 182.70 | 6.425 | 404.78 | 7.700 | 485.10 | 9.225 | 581.18 | 12.025 | 757.58 |
| மாவு | 54.00 | 1.000 | 54.00 | 1.000 | 54.00 | 2.400 | 129.60 | 3.000 | 162.00 | 3.200 | 172.80 |
| சீனி | 61.40 | 1.000 | 61.40 | 1.500 | 92.10 | 2.000 | 122.80 | 2.500 | 153.50 | 3.100 | 190.34 |
| பருப்பு | 185.50 | 0.200 | 37.10 | 0.350 | 64.93 | 0.550 | 102.03 | 0.600 | 111.30 | 0.750 | 139.13 |
| வழங்கியது | | | 335.20 | | 615.81 | | 839.53 | | 1,007.98 | | 1,259.85 |
| வ.வேண்டியது | | | 336.00 | | 616.00 | | 840.00 | | 1,008.00 | | 1,260.00 |
| மீதி | | | 0.80 | - | 0.19 | - | 0.47 | - | 0.02 | - | 0.15 |

**சமுர்த்தி நிவாரணம்**

| | | 1015/- | | 615/- | | 350/- | | 250/- | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| அரிசி | 90.00 | 4.600 | 414.00 | 2.800 | 252.00 | 2.350 | 211.50 | 1.600 | 144.00 |
| மாவு | 75.00 | 3.000 | 225.00 | 2.000 | 150.00 | 1.000 | 75.00 | 0.500 | 37.50 |
| சீனி | 75.00 | 1.000 | 75.00 | 0.500 | 37.50 | 0.500 | 37.50 | 0.500 | 37.50 |
| பருப்பு | 140.00 | 0.500 | 70.00 | 0.250 | 35.00 | 0.250 | 35.00 | 0.250 | 35.00 |
| வழங்கியது | | | 784.00 | | 474.50 | | 359.00 | | 254.00 |
| வழங்க வேண்டியது | | | 786.32 | | 477.68 | | 362.76 | | 256.04 |
| மீதி | | | 2.32 | | 3.18 | | 3.76 | | 2.04 |

## அத்துளுத் திட்டத்தின் கீழ் தனியாக இணைப்புப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி, டிசெ.23

அத்துளுத் திட்ட குடிதண்ணீர் விநியோகத்தின்கீழ் தனியாக இணைப்புப்பெற விரும்புவோர் அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பிவைக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (203 -70)

## பங்கீட்டு அட்டைக்கு சீனி விநியோகம்

நல்லூர், டிசெ.23

நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நல்லூர் பல.நோ.கூ.சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ சீனி 75 ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

ஒன்றுமுதல் 2 வரையான அங்கத்தவர்களுக்கு ஒரு கிலோவும் 3 முதல் 4 பேருக்கு ஒன்றரைக் கிலோவும் 5 இற்கு மேற்பட்டோருக்கு 2 கிலோவும் வழங்கப்பட்டு வருகிறது. (203-111)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே முகாமைத்துவப் போட்டிகள்

மானிப்பாய், டிசெ.23

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே முகாமைத்துவப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சபையின் அனுசரணையுடன் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் இது குறித்து தகவல் தருகையில் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை மேலும் திட்டமிட்டு போட்டித் தன்மையுடன் திகழக்கூடியவாறும் அவற்றின் மொத்த செயலாற்றுகையை அதிகரிப்பதன் மூலம் வினைத்திறன்மிக்க பயனுறுதி வாய்ந்த பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதற்கும் உள்ளூராட்சி மன்றங்களை வழிநடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 5 மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டங்களில் அமைந்துள்ள பிரதேச சபைகளுக்கு இடையிலான போட்டியை மாவட்ட ரீதியாக நடத்தி பின்னர் அங்கு தெரிவுசெய்யப்படும் பிரதேச சபைகளுக்கு இடையிலான ஒரு போட்டியை மாகாண ரீதியிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநகர -நகர சபைகளுக்கு இடையிலான போட்டி மாகாண மட்டத்தில் மாநகர சபைக்கும் - நகரசபைக்கும் என தனித் தனியாக நடத்தப்படும் - என்றார். (202 -95)

# மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அடுத்த வருடத்தில் பல புதிய திட்டங்கள் வகுக்கப்படும்

### யாழ்.ப.நோ.கூ.சங்கம் மேற்கொள்ளவுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அடுத்தவருடம் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு பல புதிய திட்டங்களை வகுத்து முன்னெடுக்கவுள்ளதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

சங்கத்தின் வருடாந்த பணியாளர் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு தலைமை வகித்து உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

இந்தச் சங்கம் 2008ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர் போன்றோரின் வசதி கருதி நடமாடும் கூட்டுறவு சேவையை சிறந்தமுறையில் நடத்தி வெற்றிகண்டுள்ளது.

அத்துடன் நலிவுற்ற குடும்பத்தினர் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் போன்றோருக்கு சங்கத்தினால் இலவசமாக உலர் உணவுப் பொருள்கள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் தேவை கருதி சங்கம் இவ்வாறான சேவைகளை இந்த ஆண்டில் முன்னெடுத்துச் செயற்படுத்தி வந்துள்ளது.

சங்கத்தின் கிளைகள் ஊடாக மக்களுக்கு சகல பொருள்களும் தாராளமாகவே விநியோகிக் கப்பட்டு வருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் குடாநாட்டிலேயே எமது சங்கமே பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியது.

இந்த வெள்ள அனர்த்தத்தையும் பொருட்படுத்தாது எமது சங்கப் பணியாளர்கள் இப்பிரதேச மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளனர்.

இந்த சங்கத்தையே எதிர்பார்த்து வாழும் பல ஆயிரக்கணக்கான இப்பிரதேச மக்களுக்கான சேவைகள் 2009ஆம் ஆண்டில் மேலும் விஸ்தரிக்கப்படும். அத்துடன் சங்கப் பணியாளர்களுக்கான தேவைகள் போன்றவையும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும்-என்றார். (203-224)

# இப்படியும் நடக்கிறது!

யாழ்ப்பாணம், டிசெ.23

குடாநாட்டில் அண்மைக்காலமாக திருட்டும் கொள்ளையும் மலிந்துபோயுள்ளன. முன்னரைவிட தினமும் திருட்டோ கொள்ளையோ குடாநாட்டில் பரவலாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் பாதணிகளைத் திருடுபவர்களின் விஷமங்களும் சமீப காலத்தில் அதிகரித்துள்ளன. திருமண வைபவங்கள், சமய, கலாசார நிகழ்வுகள் என்பவற்றுக்குத் திட்டமிட்டு வரும் ஆசாமிகள் இத்திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

பழைய செருப்புகளுடன் வரும் இவர்கள் அவற்றை விட்டுவிட்டு புதிதாக உள்ள, பெறுமதிமிக்க செருப்புகளை தமதாக்கிக்கொண்டு செல்கின்றனர்.

அடுத்தடுத்து நான்கு சோடி செருப்புகளைப் பறிகொடுத்த ஒருவர் இது குறித்துக் கூறுகையில் -

அடுத்தடுத்து நடந்த விசேட நிகழ்வுகளுக்கும் சென்றுவிட்டு வீடு திரும்பும் போது வெறுங்காலுடன் திரும்பியதாகத் தனது கவலையை வெளியிட்டார்.

காலம் கலிகாலம் போச்சு இனியும் என்னென்ன நடக்குமோ... என்று சலித்துக் கொண்டார். (202)

# வலி.கிழக்கு விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் மும்முரம்

யாழ்ப்பாணம், டிசெ.23

வலி.கிழக்கு பிரதேசத்தில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தோட்ட நிலங்களைச் சீர்செய்தும் பசளை போட்டும் விவசாயச் செய்கையை மேற்கொள்ளும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கத்தரி, கோவா, மரவள்ளி, வெங்காயம், மிளகாய், வெண்டி, பயிற்றை போன்ற மரக்கறிப் பயிர்களை மீளப் பயிரிடும் பணிகள் தோட்டங்களில் களை கட்டியுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட நிஷா புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் இப்பிரதேசத்தில் விவசாயப் பயிர்களை பெருமளவில் அழிந்து நாசமாகியுள்ளது.

அத்துடன் இப்பிரதேச வாழைகள் மற்றும் மரவள்ளி பயிர்களும் புயலால் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (202-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**North Lanka IIT**

Main Street, Chankanai.
0602214305
New College of Higher Studies, Ariyakulam Junction, Jaffna.

SUCCESS MAKES PERFECT

A/L பரீட்சை முடிவுகள் தாமதமாவதால் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

**மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2009 ற்கான**

**விண்ணப்ப முடிவுத் திகதி 10-01-2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது**

போட்டிப் பரீட்சை 11-01-2009 1:00 மணிக்கு நடைபெறும்
Admission Card இனை 03-01-2009, 04-01-2009 திகதிகளில் பெற்றுக்கொள்ளவும்


## கலந்துரையாடல்

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் அதிபர் தலைமையில் நாளை (24.12.2008) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பாடசாலையில் நடைபெற வுள்ளதால் அனைவரையும் வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வி.மாணிக்கம் (அதிபர்).

(சி/156208)


## விற்பனைக்கு

புறொயிலர் வளர்க்கக்கூடிய இரண்டு தட்டு கோழிக் கூடு, ஒரு வயது நிரம்பிய பொமேரியன் நாய்க்குட்டிகள் (சோடி) என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.ஜெயந்தா (ஜெயன்) மயிலு வீதி, ஆறுகாப்பு ம்.

(81079)


## பதவி உயர்வு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெம்.23

அலுவலகப் பணியாளர்களிடையே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் செயற்படுமாறு நியமனக் கடிதங்கள் அந்தந்த நிறுவனத் தலைவர்களுக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் இ.இரவீந்திரனால் அனுப்பப்பட்டுள்ளன.

(203 -207)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகலெட்சுமி திருநாவுக்கரசு



வேலணை மேற்கினைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலெட்சுமி திருநாவுக்கரசு (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நாகராசா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற உலகபரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், பாக்கியலெட்சுமி, சண்முகம்பிள்ளை, இராசம்மா, பசுபதிப்பிள்ளை, லெட்சுமிப்பிள்ளை, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (22.12.2008) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பரிபூரணன் (பெறாமகன்),
(வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்).

பொற்பதி றோட்,
பிள்ளையார் கோயில் மேற்கு வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

### சின்னத்தம்பி தம்பித்துரை (ஆசாரியார்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தம்பித்துரை நேற்று (22.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.லோகநாதன்
(மகன்)

இல. 40/2, கலைமகள் வீதி,
அரியாலை.


**IDM**

Nation's ICT Academy
Pre University College
Affiliated University College

**O/L**
பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்காக.....

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**BTEC - Diploma in ICT Application (DICTA)**
Edexcel International - UK

Course Contents

*Unit I*- Fundamentals Information & Communication Technology
*Unit II*- End user ICT Applications.
- Ms Windows - Ms DOS - Linux - Ms Word - Ms Excel
- Ms Powerpoint - Ms Access - Flash - Photoshop.

*Unit III*- Personal Skills Development.
*Unit IV*- Web Design Development

Duration Only 03 Months

*Select a Course of your choice*

* Flash
* Dreamweaver
* Pagemaker
* Adobe Photoshop
* Adobe Illustrator
* CorelDRAW
* Certificate in Multimedia
* Certificate in Desktop Publishing
* Certificate in Audio & Video Editing
* Certificate in GIT Course
* Certificate in Computer Aided Designing using AutoCAD
* Certificate in Applied Electrical & Electronic Engineering
* Computerized Accounting Packages
* Windows XP/2000
* MS Office (Word, Excel, Access, PowerPoint, Outlook)
* JAVA, VB.Net, PHP, MySQL, C++

இலங்கை அரசினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனத்தில் இன்றே இணையுங்கள்!

IDM Afflated University College - Jaffna Dst. Branch

216, Navalar Road, Jaffna. T.P: 021 222 9901
"Happy House" Thavady Road, Manipay
Kodikamam Road, Nelliyady. 060-2219639
Web - www.idm.lk, www.idm.edu



**B. Sc. in Multimedia இப்போது யாழ்ப்பாணத்திலும்**

**NORTH LANKA IIT உடன் இணைந்து**

**B. Sc. in Multimedia- 1st Year**

- ✓ 1ம் வருட கற்கைநெறிகளை யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் தொடரலாம்
- ✓ 2ம். 3ம் வருட கற்கைநெறிகள் பின்வரும் நாடு ஒன்றில் உள்ள பல்கலைக்கழகங்களில் தொடர முடியும் (Netharland, New Zealand, Malta(Italy), Malaysia U.K.)
- ✓ வெளிநாடு செல்வதற்கான Visa ஒழுங்குகள் செய்து தரப்படும்
- ✓ வெளிநாட்டில் Part Time Job ஒழுங்கு செய்து தரப்படும்
- ✓ தங்குமிட வசதி முற்றிலும் இலவசம்
- ✓ மருத்துவ காப்புறுதி ரூபா 50 இலட்சம் வரை
- ✓ விடுமுறைக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான தற்காலிக Visa வசதி
- ✓ இரண்டு வருட முடிவில் நிரந்தர Visa விற்கு (PR) விண்ணப்பிக்க முடியும்

2ம் வருடத்தை தொடர்வதற்காக 2008 இல் வெளிநாடு சென்ற மாணவர்களில் சிலர்



யோகேஸ்வரன் கோசலன்
மீசாலை



நவரத்தினம் குகலிங்கன்
காரைநகர்



சத்தியநாதன் பிரசாந்தன்
யாழ்ப்பாணம்



தங்கவேலு லவகுசன்
மல்லாகம்



அன்னலிங்கம் நிசாந்தன்
வேலணை



யோகேந்திரா பிரதீபன்
கந்தர்மடம்

**B. Sc. in Multimedia கற்கைநெறிக்கு**

யாழ்ப்பாணத்தில் பதிவு செய்தவர்கள் கொழும்பிலுள்ள எமது நிறுவனத்தில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்ய முடியும்

NORTH LANKA IIT நிறுவனமானது எமது கற்கைநெறிகளை யாழ்ப்பாணத்திலே நடாத்துவதற்கு அங்கீகாரமுடைய ஒரேயொரு நிறுவனமாகும்

**NOTTINGHAM COLLEGE OF LONDON**

36-1/1, Station Road, Colombo 6
Phone: +94 112598059 Web: www.nclworld.Net

**NORTH LANKA IIT**
Main Street, Chankanai.
0602214305
New College of Higer Studies, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்திய - இங்கிலாந்து டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடையும் சாத்தியம்

## இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா தடுமாற்றம்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடையக்கூடிய சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. நான்காம் நாளான நேற்று ஆட்டநேர முடிவில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. முன்னதாகத் தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 453 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 302 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அந்த அணி சார்பாக அணித்தலைவர் பீற்றர்சன் மாத்திரம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 144 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் ஹர்பஜன்சிங் 4 விக்கெட்டுகளையும் சகீர்கான் 3 விக்கெட்டுக்களையும் மிஷ்ரா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியைவிட 152 ஓட்டங்கள் அதிகமாகப் பெற்றிருந்த இந்திய அணி நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஷேவாக் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முதலாவது இன்னிங்ஸில் 136 ஓட்டங்களைப் பெற்றிருந்த டிராவிட் இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து வந்த சச்சின் (5) லக்ஷ்மன் (15) ஆகியோரும் விரைவாக ஆட்டமிழந்தனர். நேற்றைய ஆட்டநேர முடிவில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களை எடுத்திருந்தது. போட்டியின் ஐந்தாம் நாள் இன்றாகும்.


டக் அவுட் ஆகிறார் டிராவிட்


சச்சினை வீழ்த்திய மகிழ்ச்சியில் இங்கிலாந்து வீரர் அண்டர்சன்

## ஐ.பி.எல்லில் ஆட மாலிக் விருப்பம்

கராச்சி, டிச. 23

ஐ.பி.எல். போட்டிகளில் தொடர்ந்து ஆடதாம் விரும்புகிறார் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் ஷொயிப் மாலிக் கூறியுள்ளார்.

மும்பைத் தாக்குதலை அடுத்து இந்திய அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செல்ல மறுத்துவிட்டது. இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையாக குறை கூறியுள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தான் அணித்தலைவர் ஷொயிப் மாலிக், ஐ.பி.எல். போட்டிகளில் தொடர்ந்து ஆட விரும்புகிறார் எனக் கூறியுள்ளார்.

அவர் டில்லி அணி சார்பில் விளையாடினார். தற்போது ஏற்பட்டுள்ள சிக்கலான நிலையை மீறி ஒப்பந்தப்படி ஐ.பி.எல். போட்டியில் ஆடதாம் விரும்புகிறார் என அவர் கூறியுள்ளார்.

எனினும் இந்த விடயத்தில் பாகிஸ்தான் அரசு மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் நடந்து கொள்வேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அதிகமாக தூஷ்ரா வீசுவதால் ஹர்பஜனுக்குத்தான் பாதிப்பு

லண்டன், டிச. 23

ஹர்பஜன் சிங் அதிகமான தூஷ்ரா வகை பந்துகளை வீசுவதால் பாதிப்பு அவருக்குத் தான் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் மைக்கல் ஆதர்டன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

மேலும் தூஷ்ரா வகை பந்துகளை அவர் அடிக்கடி வீசுவதால் அவரது சுழற்பந்து வீச்சுத் திறன் பாதிக்கப்படுகிறது என்றும், இதனால் அவர் அணியில் பின்னடைவைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இந்த டெஸ்டில் முன்னணி சுழற்பந்து வீரரான ஹர்பஜன்சிங் ஜொலிக்கவில்லை. இதற்குக் காரணம் அவர் அதிகமாக தூஷ்ராவை கையாண்டமை தான் என்கிறார் ஆதர்டன்.

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் இருந்து வெளியாகும் 'தி டைம்ஸ்' நாளிதழில் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சுக் குறித்து மேற்கண்டவாறு தனது கருத்தை ஆதர்டன் தெரிவித்திருக்கிறார்.

அவருக்கு நன்கு பரிச்சயமான மைதானத்தில் துடுப்பாட்டக்காரர்கள் சரியாகப் பயிற்சி எடுக்காத நிலையில் கூட ஹர்பஜனால் பிரகாசிக்க முடியவில்லை, என்றும் ஆதர்டன் கூறியிருக்கிறார். மேலும் ஹர்பஜன் சிங் அதிகமான தூஸ்ரா பந்துகளை வீசுவதால் அவரது திறமை பாதிக்கப்படுகிறது. அவரது முழுத்திறனும் வெளியாகவில்லை. 'ஓவ் ஸ்பின்னரான' அவரது சுழற்பந்துவீச்சு பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்றும் ஆதர்டன் குறிப்பிட்டு இருக்கிறார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான மான்டி பனேசர் சென்னை டெஸ்டில் முழங்கையை சற்று வளைத்தவாறு பந்து வீசினார். இதற்குப் போதிய பயிற்சி இன்மையும், அதிக எதிர்பார்ப்புமே காரணம் என்றார் ஆதர்டன். சென்னை டெஸ்டில் கடைசி நாளன்று பனேசர் பிரகாசிக்கவில்லை. அவர் 27 ஓவர்கள் வீசிய போதிலும், விக்கெட் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் அவரது பந்து வீச்சு மோசமாக இருக்கவில்லை. இந்தப் போட்டியில் அமித் மிஸ்ரா 51 ஓவர்கள் வீசி 165 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டை எடுத்தார்.

ஹர்பஜன் சிங் 68 ஓவர்கள் வீசி 187 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பனேசர் 46 ஓவர்களை வீசி 170 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். மூன்று பேரிலும் வித்தியாசதம் அதிகமில்லை என்றும் ஆதர்டன் சுட்டிக் காட்டினார்.

ஷேன் வோர்ன் போன்று மான்டி பனேசர் வருவார் என்ற எதிர்பார்ப்பை இங்கிலாந்து நிர்வாகம் கைவிடவேண்டும். பனேசர் அவரது பலத்திற்கு ஏற்றவாறு பந்துவீச வேண்டும் என்றும் ஆதர்டன் தெரிவித்து இருக்கிறார்.

## கிறிஸ்கெயிலின் அதிரடியான ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் வலுவான நிலையில்

நியூஸிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளிடையே நடைபெற்றும் வரும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் கிறிஸ்கெயில் அதிரடியாகச் சதம் விளாச இரண்டாவது இன்னிங்ஸில் அந்த அணி 7 விக்கெட் இழப்புக்கு 278 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 307 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அந்த அணி வீரர் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மைக்ரூஸ் 136 ஓட்டங்களைக் குவித்தார். முதல் இன்னிங்ஸில் 64 ஓட்டங்கள் பின்னிலை வகித்த மேற்கிந்தியத் தீவுகள் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 278 ஓட்டங்களை அந்த அணி எடுத்திருந்தது. கிறிஸ்கெயில் ஆட்மிழக்காமல் 146 ஓட்டங்களைப் பெற்று ஆடிக்கொண்டிருக்கிறார்.

ஆட்டத்தின் 5ஆம் நாள் இன்றாகும்.


சதமடித்த மகிழ்ச்சியில் கிறிஸ்கெயில்




## உலகக் கிண்ணத்துக்கு அச்சுறுத்தல் இல்லை

★ 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் நடத்துகின்றன. மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இந்தப் போட்டி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தலைவர் டேவிட் மொர்கான் மொஹாலியில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில், '2011ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டி சிறப்பான முறையில் இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெறும். அதற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

## ஆஸி. அணியில் ஹவுரீட்ஸ்

சிட்னி, டிச.23

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் கிரேஜாவுக்கு பதிலாக ஹவுரீட்ஸ் சேர்க்கப் பட்டுள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா அபார வெற்றிபெற்றது. 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 26ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான அணியில் சுழற்பந்து வீச்சாளர் கிரேஜா நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக நாதன் ஹவுரீட்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

## கிரிக்கெட் சபைக்கு நன்றி

மொஹாலி, டிச. 23

சென்னை மற்றும் மொஹாலி டெஸ்ட் போட்டிகளில் சிறந்த முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச்செய்து தந்ததற்காக இந்திய கிரிக்கெட் சபைக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை நன்றி தெரிவித்துள்ளது.

மேலும் ஐ.பி.எல். போட்டிகள் தொடர்பான பேச்சு நல்ல முறையில் நடைபெற்றதாகவும், ஜனவரி மாதம் மீண்டும் பேச்சு நடைபெற இருப்பதாகவும் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஐ.பி.எல். போட்டிகள் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபை மற்றும் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை இடையே உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## டோனிக்கு பீற்றர்சன் நன்றி

மொஹாலி டெஸ்டில் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் டோனியின் யுக்தி குறித்து பீட்டர்சன் கிண்டல் செய்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் பீட்டர்சன் நேற்றுமுன்தினம், டெஸ்டில் 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்தது மட்டுமின்றி அதிவேகமாக 15 சதங்களை தொட்ட (45ஆவது டெஸ்ட்) 7ஆவது வீரர் என்ற சிறப்பையும் பெற்றார். மேலும் இந்த ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களையும் கடந்தார்.

3ஆவது நாள் ஆட்டம் முடிந்த பின்னர் பீட்டர்சன் கூறியதாவது:-

ஆட்டம் முடியும் தறுவாயில் 2 விக்கெட்டுகளை இழந்தது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இனி நாங்கள் ஆட்டத்தை சமன் செய்வதற்காக ஆடுவது தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்திய மண்ணில் முதல் முறையாக சதம் அடித்திருக்கிறேன். இது இனிமையான சதம்.

சகீர்கான் சிறப்பாகப் பந்து வீசி தொடக்க விக்கெட்டை வீழ்த்திய நிலையில், நான் களம் இறங்கியபோது அவருக்குப் பதிலாக திடீரென யுவராஜ்சிங்கை டோனி பந்துவீச அழைத்தமை ஏன் என்பது எனக்கு தெரியவில்லை. இது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சி அளித்தது. இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உலகின் சிறந்த இடக்கைப் பந்து வீச்சாளர்களில் ஒருவர் சகீர்கான். ஆனால் யுவராஜ்சிங் சாதாரணமாகப் பந்தை எறியக்கூடியவர். என்னை பொறுத்தவரை சகீர்கானுக்குப் பதிலாக ஆட்டம் முழுவதும் யுவராஜ்சிங் பந்து வீச்சை எதிர்கொள்ளவே விரும்புகிறேன் இவ்வாறு பீட்டர்சன் தெரிவித்தார்.

## இந்தியாவின் சிறந்த வழிகாட்டியாக கிரிக்கெட் வீரர் டெண்டுல்கர் தெரிவு

மும்பை, டிசெ. 23

தேசிய அளவில் ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதில் யார் சிறந்தவர் என்று நடத்தப்பட்ட தேர்வில் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதில் யார் சிறந்தவர் என்பதற்கான இந்தத் தெரிவில் 320 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்றனர். இந்த வாக்கெடுப்பின் இறுதியில் டெண்டுல்கர் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார் என பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது. டெண்டுல்கர் தவிர, இந்திப் படத்தின் முன்னாள் சூப்பர் ஸ்டாரான அமிதாப் பச்சன் மற்றும் முன்னாள் ஜனாதிபதியான ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஆகியோர் முதல் மூன்று இடத்தைப் பிடித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பில் முதல் இடம்பிடித்த டெண்டுல்கரிடம் இது குறித்து கேட்டபோது, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதில் யார் சிறந்தவர் என்று நடந்த வாக்கெடுப்பில் தான் முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்டமை ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியை அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், இது உண்மையா? இந்தியாவில் அதிக ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சி உள்ளவராக மக்கள் என்னை தெரிவு செய்துள்ளனர். இது எனக்கு கிடைத்த பாராட்டு. இது எனக்கு அதிக குதூகலத்தை அளித்துள்ளது. இந்த சந்தோஷத்தை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது என்று இது குறித்து டெண்டுல்கர் தெரிவித்தார் என பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தை அங்கீகரிக்கக் கோரி சென்னையருகே ஆர்ப்பாட்டப் பேரணி



## இடியாக முழங்கினர் தொழிலாளர் புரட்சிகர முன்னணியினர்

இந்திய அரசே!

விடுதலைப்புலிகள் மீதானதடையை நீக்கு!

தமிழீழத்தை அங்கீகரி!

சிங்கள இனவெறி அரசின் தமிழின அழிப்புப்போரை உடனே தடுத்து நிறுத்து!

சிங்கள இனவெறி அரசுக்கு இராணுவ, பொருளாதார உதவிகளைச் செய்யாதே!

செய்த உதவிகளைத் திரும்பப்பெறு!

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சென்னையை அடுத்துள்ள பம்மலில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் பம்மல் பஸ் நிலையம் அருகில் புரட்சிகர தொழிலாளர் முன்னணி, ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி, காஞ்சிமாவட்ட தோல் மற்றும் தோற்பொருள் உற்பத்தி தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின.

சிங்கள இனவெறி அரசு ஈழத் தமிழர்களை இராணுவ முப்படை கொண்டு குண்டு வீசி குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியோர் உள்ளிட்ட அனைவரையும் படுகொலை செய்து வருகிறமைக்கு இந்திய அரசுதான் பின்புலமாகவும், பக்கபலமாகவும் இருந்து வருகிறது.

இராணுவத் தளபாடங்கள், பொருளாதார உதவிகள், இந்திய இராணுவக் கூலிப்படைகள் உள்ளிட்ட சகல உதவிகளையும் அளித்து வருகிறது. எனவே, இந்திய அரசு உடனடியாக இலங்கைக்கு உதவிகள் வழங்குவதை நிறுத்தவேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக பேசி கைது செய்யப்பட்ட இயக்குநர் சீமான், கொளத்தூர் மணி, பெ.மணியரசன் ஆகியோர் உள்ளிட்ட ஈழ விடுதலை ஆதரவாளர்களை உடனே விடுதலை செய்யக்கோரியும், ஈழவிடுதலை ஆதரவாளர்களை கைது செய்யாதே! சிங்கள கைக்கூலிகளைக் கைது செய்! என்ற முழக்கங்கள் விண் அதிர முழங்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்வாணன் தலைமை வகித்தார். தமிழ்மணி, இனியவன், ரவி (காஞ்சி மாவட்ட தோல் மற்றும் தோற்பொருள் உற்பத்தி தொழிலாளர் சங்கம்) கண்டன உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 100 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.



சமத்துவ மக்கள் கட்சியின் துணைத் தலைவராக நியமனம் செய்யப்பட்ட ராதிகாவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் சரத்.....

# சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்தும்வரை ஓயமாட்டேன் என்கிறார் நடிகை ராதிகா!

திருநெல்வேலி, டிச. 23

சமுதாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் வரை ஓயமாட்டேன் - என்று சமத்துவ மக்கள் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட நடிகை ராதிகாசரத்குமார் தெரிவித்துள்ளார்.

பாளையங்கோட்டையில் ஞாயிற்றுக் கிழமை இரவு நடைபெற்ற சமத்துவ மக்கள் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் துணைத் தலைவராக ராதிகா நியமிக்கப்படுகிறார் என்று கட்சித் தலைவர் சரத்குமார் அறிவித்தார்.

கூட்டத்தில் ராதிகா மேலும்பேசியவை வருமாறு-

கட்சி தொடங்கி ஓராண்டு ஆகிறது. அதற்குள் மரமாக வளர்ந்து வருகிறது. எங்களுக்கு கொள்கை உண்டு. அதன் அடிப்படை லட்சியம், மாற்றத்தை நோக்கியதாகும்.

சரத்குமார் நல்லவர்; நன்றி உள்ளவர்; உதவி செய்யும் மனோபாவம் கொண்டவர். படித்தவர்; பண்பாளர்; உழைப்பவர்; பச்சைத் தமிழர். சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தவும், படித்தவர்கள் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தவும் விரும்புகிறோம். அதனால்தான் கட்சியைத் தொடங்கினோம்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், படித்த இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்றார். அதுமட்டுமல்ல பெண்களும் அரசியலுக்கு வரவேண்டும்.

அப்போதுதான் வன்முறை ஒழியும். சமத்துவ மக்கள் கட்சிக்கு வாருங்கள். பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவோம். எமது கட்சியை பலப்படுத்தவும் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வரை ஓய மாட்டேன் - என்றார்.

# தமிழீழ அங்கீகார மாநாட்டுக்குத் தடை; சட்டப்படி செல்வோம் என்கிறார் திருமா

சென்னை, டிச. 23

சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நடத்தவிருந்த தமிழீழ அங்கீகார மாநாடு, இளம் சிறுத்தைகள் பாசறை தொடக்க விழா ஆகியனவற்றுக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர். இந்தத் தடையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவோம் - என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவன் மீது தாக்குதல் நடத்தினர் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, காங்கிரஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளுக்கு இடையே மோதல் முற்றத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை அமைந்தகரை புல்லா அவென்யூவில் தமிழீழ அங்கீகார மாநாடு, இளம் சிறுத்தைகள் பாசறை தொடக்க விழா ஆகியன டிசம்பர் 26ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது.

காங்கிரஸ் கட்சிக்கும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும் இடையே மோதல் போக்கு உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இந்த மாநாட்டுக்கு பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென தடை விதித்தனர். தடைக்கான காரணத்தை விளக்கி, இளஞ்சிறுத்தைகள் பாசறையின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் செல்வத்திடம் பொலிஸார் நோட்டீஸ் கொடுத்துள்ளனர். அதில்,



''மாநாடு நடைபெறும் பகுதி ஏற்கனவே போக்குவரத்து நெரிசல் நிறைந்தது. பண்டிகைக் காலம் என்பதால் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். இந்த நிலையில், அங்கு மாநாடு நடத்துவதால் போக்குவரத்து நெரிசல் கடுமையாக ஏற்படும். இதனால், மாநாடு நடத்த தடை விதிக்கப்படுகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திட்டமிட்டபடி மாநாட்டை நடத்த நீதிமன்றத்தை அணுகுவோம் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இந்தத் தடையை சட்டப்படி சந்திப்போம். உடனடியாக, நீதிமன்றத்தை அணுகி, திட்டமிட்ட நாளில் மாநாட்டை நடத்துவோம். மாநாட்டுக்குத் தடை விதித்ததற்கான காரணம் சட்டப்பூர்வமானதாக இல்லை - என்றார்.

# திருமாவளவனை உடன் கைது செய்க! அமைச்சர் இளங்கோவன் வலியுறுத்து

ஈரோடு, டிச.23

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசி வரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் - என்று மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரின் 61ஆவது பிறந்தநாள் விழா நேற்றுமுன்தினம் காலை ஈரோடு, கச்சேரி வீதியிலுள்ள அவருடைய வீட்டில் நடைபெற்றது. இதையொட்டி அவர் பிறந்தநாள் 'கேக்' வெட்டி கொண்டாடினார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

விடுதலைப் புலிக[illegible]கு ஆயுதம் கடத்த உதவியாக உள்ள விடுத[illegible] சிறுத்தைகள் கட்சி தலைவ[illegible] திருமாவளவனை தமிழக அரசு உடனடியா[illegible] கைது செய்ய வேண்டும். சமீப காலமாக தமிழகத்தில் பொலிஸாரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது தமிழகத்தில் பொலிஸார் காட்சிப்பொருளாகத்தான் உள்ளனர்.

இதே நிலை நீடித்தால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைக் காக்க என்ன செய்வது என்பதை மத்திய அரசு யோசிக்க வேண்டிய நிலை உருவாகும்.



சத்தியமூர்த்தி பவனில் விடுதலைச் சிறுத்தைகள் சில பேர் நடத்திய தாக்குதலில் காங்கிரஸ் கட்சித்தொண்டர் ராஜன் என்பவர் படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். திருமாவளவன் மீது தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று காங்கிரஸார் எதிர்பார்த்துள்ளனர்.

திருமாவளவனைக் கைதுசெய்ய வேண்டியது அவசியம் என்பது ஒட்டுமொத்த காங்கிரஸ் கட்சியினரின் கருத்தாகும். இல்லாவிட்டால் காங்கிரஸார் அடுத்த கட்டப் போராட்டத்தில் ஈடுபடும் நிலை ஏற்படும்.

விடுதலைப்புலிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆதரவாகச் சிலர் பேசி வருகிறார்கள். ஆனால் தமிழக மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை.

ஈரோடு பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசிய சிலர் கைது செய்யப்பட்டு 31ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ராஜீவ்காந்தி கொலையை நியாயப்படுத்தி பேசியிருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும். விடுதலைப் புலிகளிடம் இருந்து அவர்கள் பணம் பெற்றுக்கொண்டு பேசி வருகிறார்கள் - என்றார்.

# இலங்கையிலிருந்து தமிழகம் வந்த சிங்களத் தம்பதி மதுரைச் சிறையில்!

இராமேசுவரம்,டிச.23

இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்திற்குத் தப்பி வந்த சிங்களக் காதல் ஜோடியை பொலிஸார் கைது செய்து மதுரைச் சிறையில் அடைத்தனர்.

கடந்த சனிக்கிழமை இலங்கையில் இருந்து காதல் திருமணம் செய்துகொண்ட சாருகா தில்கானி (வயது - 16) என்ற சிங்கள பெண்ணும், துஸாரா சந்தனா (வயது - 25) என்ற இளைஞரும் வந்தனர். சந்தேகத்தின் பேரில் கியூப் பிரிவுப் பொலிஸார், அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது சிங்களக் காதல் ஜோடி கடவுச்சீட்டு, விஸா உட்பட எந்த ஆவணங்களும் இல்லாமல் இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்திற்கு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் இராமேஸ்வரம் நீதிமன்றில் சிங்களக் காதல் ஜோடியை ஆஜர்படுத்தினர். அவர்களிடம் விசாரணை மேற்கொண்ட நீதிபதி விஜயகுமார், காதல் ஜோடியை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து சாருகா தில்கானி மதுரை மைனர் ஜெயிலிலும், துஸ்ராசந்தனா மதுரை மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரது முழு விவரத்தையும் அறிய இராமேஸ்வரம் கியூப் பிரிவுப் பொலிஸார் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதன் பேரில் தூதரக அதிகாரிகள் காதல் ஜோடிகள் கொடுத்த தகவலின்படி இலங்கைக்குத் தொடர்பு கொண்டு விசாரித்து வருகிறார்கள்.

# வேலை பெற்றுத் தருகின்றேன் என்று கூறி பணம் சுருட்டிய இலங்கைப் பெண் கைது!

## சென்னைப் பொலிஸார் அதிரடி

சென்னை, டிச.23

கனடாவில் வேலை வாங்கித் தருகிறேன் எனக் கூறி பலரி[illegible] பண மோசடி செய்த இலங்கைப் பெ[illegible]வரை சென்னையில் நேற்றுமுன்தினம் [illegible] கைதுசெய்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ச[illegible] (வயது - 53). இவர் சென்னை மறைமலை அடிகள் நகரில் வாடகை வீட்டில் தங்கியிருந்தார். இங்கிருந்து கொண்டே இலங்கையைச் சேர்ந்த பலரிடம், க[illegible]வில் வேலை வாங்கித் தருகிறேன் எனக் கூறி [illegible] லட்சம் ரூபாவை வசூலித்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த குலதீபன் என்பவரை சென்னைக்கு வரவழைத்து, தாம்பரம் ஹோட்டலில் தங்கவைத்தார். குலதீபனின் கடவுச்சீட்டையும் வாங்கியுள்ளார்.

வேலை வாங்கித்தர குலதீபனிடம் இருந்து ரூ.6 லட்சத்து 33 ஆயிரத்தை சர்மிளா வாங்கினார். ஆனால், 3 மாதமாகியும் வேலை வாங்கிக் கொடுக்கவில்லை.

ஏமாற்றப்பட்டதை உணர்ந்த குலதீபன், பொலிஸ் கமிஷனரிடம் முறைப்பாடு கொடுத்தார். மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் சர்மிளாவை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். அவரிடம் இருந்து ரூ.30 ஆயிரம், 16 பவுன் நகை பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில், இலங்கையைச் சேர்ந்த பெர்னாண்டோ[illegible] லட்சம் வாங்கி[illegible] வந்தது.

## இந்தியச் செய்திகள்

# ஜெ. உத்தரவுப்படி காங்கிரஸார் நடந்து கொள்வார்களா என்ன?

## கருணாநிதி அறிக்கை

சென்னை, டிச. 23

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா உத்தரவுப்படி, இங்குள்ள காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொள்வார்களா என்ன..?

எங்கள் தயவில்தான் தி.மு.க. ஆட்சி நடக்கிறது என்று தங்கபாலு கூறியுள்ளார். நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா என்பதுபோல் இருக்கிறது.

- இவ்வாறு முதல்வர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு-

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக, இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசியவர்களின் மீது தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார்கள். நடவடிக்கை எடுத்து சிலரைக் கைது செய்து சிறையில் அடைத்ததற்குப் பிறகும்; அமைதியடையாமல் தங்களையும் கைது செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு கிளர்ச்சி நடத்தி கலவரம் செய்தமை; ஜெயலலிதா தூண்டிவிட்ட செயலோ என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

[illegible]க்கு சோனியா காந்தியை இழிவாகப் பேசிய ஜெயலலிதாவுக்கு ஆதரவாக, அவர் உத்தரவுப்படி, இங்குள்ள காங்கிரஸார் நடந்து கொள்வார்களா என்ன? உங்கள் கூற்றை என்னால் நம்ப முடியாது.



மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வெள்ளப் பகுதிகளை பார்வையிட வந்த மத்திய அரசின் குழுவினர் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிவாரணப் பணிகளை வெகுவாகப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். நிவாரண உதவிகளைப் பெற்றுப் பயனடைந்தோர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அமைதியாக நடந்து வரும் நிவாரண நிதி வழங்கும் பணியினை சிலர் தாமதப்படுத்தி, வீதி மறியலால் கெடுத்து, கலவரப்படுத்தப் பார்க்கிறார்கள். இவை, அனைத்தையும் நடுநிலையாளர்கள் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் விலையை குறைக்க அரசுக்கு இன்னும் ஓரிரு தினங்களே காலக்கெடு!

## தவறினால் நாடுமுழுவதும் போராட்டம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 23

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாகப் பெற்றோல் விலையை அரசு உடனடியாகக் குறைக்கத் தவறினால் இன்னும் ஓரிரு தினங்களில் நாடளாவிய ரீதியில் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்திருக்கிறது.

இந்த விடயத்தில் அரசுக்கு இன்னும் ஓரிரு தினங்களே காலக்கெடு வழங்கப்படுவதாகவும் என்று அக்கட்சி அறிவித்திருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பியான பாலித ரங்கபண்டாரவே இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் பெற்றோல் வாகனங்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, பெற்றோல் விலையைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும் என்பதற்காகவே நீதிமன்றம் இந்த விலைக்குறைப்பைச் செய்தது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்த அரசு தவறிவிட்டது. நீதியைக் காப்பாற்ற வேண்டிய அரசே அதனை அவமதிக்கின்றது.

ஆனால் வெளிநாட்டு நிறுவனமான ஐ.ஓ.சி. நிறுவனம் எமது நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து பெற்றோல் விலையைக் குறைத்துவிட்டது. பெற்றோல் விலையைக் குறைத்தால் யுத்தத்தைக் கொண்டு நடத்த முடியாது என்று அரசு கூறுகிறது. ஆனால் தேவையற்ற விடயங்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை மீளப்பெற்றாலே பல யுத்தங்களைக் கொண்டு நடத்த முடியும்.

அரசே நீதிமன்றத் தீர்ப்பை மீறி மக்களைப் பிழையாக வழிநடத்துகின்றது. இதன்மூலம் மக்களும் மோசடி செய்யலாம் என்பதை அரசு மறைமுகமாகக் கூறுகிறது.



பெற்றோல் விலை விவகாரத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப் படுத்த அரசுக்கு இன்னும் ஓரிரு நாள்களே காலக் கெடு விதிக்கப்படுகிறது. அதனை மீறி னால் இன்னும் ஓரிரு நாள்களில் அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டங்களை நடத்த எமது கட்சி தீர்மானித்துள்ளது - என்றார். (சி)

## பிரான்ஸில் கண்டன ஆர்ப்பாட்டம்

பிரான்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புளோன் மெனி பகுதியில் வாழும் தமிழ் மக்களால், இலங்கையின் வடக்கே தமிழர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் பொபினி மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலரும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டு உரை நிகழ்த்தியுள்ளனர்.

தமிழ் மக்களால் புலம்பெயர் நாடுகளில் நாடு தழுவிய ரீதியில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் பரவலாக நடைபெற்று வரும் நிலையில், பிரான்ஸிலுள்ள ஒவ்வொரு மாநகர சபைகளிலும் இவ்வாறான கவனயீர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வன்னி மக்களின் மனிதாபிமான அவலத்தை குறைத்துக் காண்பிக்க முயல்கின்றது அரசு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.23

வன்னியில் காணப்படும் பாரிய மனிதாபிமான துயரத்தினை அரசு குறைத்துக் காண்பிக்க முனைவதாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

அரசினால் அனுப்பப்படும் உணவு உதவிகள் அப்பகுதி மக்களுக்குப் போதுமானவையல்ல என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வன்னி நிவாரணம் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னி மக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இலங்கை அரசு தொடர்ச்சியாக அறிக்கைகளை வெளியிடுகின்றது.

இவை வன்னியின் மனிதாபிமானத் துயரத்தைக் குறைத்துக் காட்டும் நோக்கத்தைக் கொண்டவை.

எனினும் அரசின் இந்த அறிக்கைகளை உறுதி செய்வதற்குப் போதுமான புள்ளி விவரங்கள் இல்லை.

மேலும் அரசு வன்னி குறித்து வெளியிடும் அறிக்கைகள் அரச உத்தியோகத்தர்கள் வெளியிடும் அறிக்கைகளுக்கு முரணாக உள்ளன.

அரசு தான் வழங்கிய உணவு உதவி குறித்தும் அது எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது, யார் பெறுகின்றார்கள் என்பது பற்றியும் விவரங்களை வெளியிடவில்லை. அரசு இந்த விடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.

எனினும் அரசு அனுப்பும் உணவு விநியோகத் தொகுதிகள் அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்குப் போதுமானவையாக உள்ளதல்ல என்பதும் உறுதியாகியுள்ளது.

அப்பாவி மக்களை மோசமாகப் பாதித்துள்ளது

செப்ரெம்பர் 2008 இல் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வன்னியில் இருந்து சகல மனிதாபிமான அமைப்புகளையும் வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

இந்தக் கொள்கை அப்பாவி மக்களை மிக மோசமாகப் பாதித்துள்ளது.

அவசர அத்தியாவசிய உணவு, மருந்து, குடிதண்ணீர் போன்றன மக்களைச் சென்றடைவதை பாதித்துள்ளது. இந்தத் தடைகளுடன் நவம்பரில் வீசிய சூறாவளியும் பலத்த பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

வன்னிக்குள் வெளியே நடமாடுவதற்கான வாய்ப்புகளும் மனிதாபிமான உதவிகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசியமான மனிதாபிமான உதவிகள் பெறுவது கடினமாகியுள்ளது.

இலங்கை அதிகாரிகள் வெளிநாடுகளில் அமைப்புகள் மற்றும் மனிதாபிமான பணியாளர்கள் தொடர்பிலான பகைமை உணர்வை வெளிப்படுத்தி வருகின்றனர். இதனை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது மனிதாபிமான அமைப்புகளை வன்னியில் இருந்து வெளியேற்றியமைக்கு அரசியல் காரணங்களும் சர்வதேச கண்காணிப்பாளர்களைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கமுகமாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

வன்னியில் இடம்பெறும் மோதல்களில் இருந்து தப்புவதற்கு முனையும் மக்கள் அரச அதிகாரிகள் தங்களை எவ்வாறு நடத்துவார்கள் என்பது குறித்து அச்சம் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறும் மக்களைத் தடுத்து வைக்கும் கொள்கையை அரசு பின்பற்றுகிறது. பாதுகாப் பிற்காகவும் தேடுதலுக்காகவும் இது இடம் பெறுகிறது.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வோர்
3மாதங்களுக்குத் தடுத்துவைப்பு

வன்னியில் இருந்து வரும் பொது மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியைக் கடக்கும் போது மூன்று மாதக் காலத்திற்கு இராணுவத்தால் நிர்வகிக்கப்படும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் சென்றவர்கள் இவ்வாறு யாழ்ப்பாணச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். முழுக் குடும்பத்தினரும் இவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக இவர்கள் சட்ட விரோதமாகக் படுகொலை செய்யப்படுதல், காணாமல் போதல் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது.

இதன் காரணமாக வன்னியில் பெரும்பாலான மக்கள் அங்கேயே தங்கியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். வெளியேறுவதற்கு அச்சம் கொண்டுள்ளனர். இவர்கள் மனிதாபிமான அமைப்புகளிடம் சென்றடைவது மிகவும் கடினமாகவுள்ளன. அரசு உடனடியாகத் தடுத்து வைப்பதை நிறுத்த வேண்டும். (சி)

## பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி அடுத்த வாரம்

கொழும்பு,டிசெ.23

அண்மையில் நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணப்) பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளன எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

முதலில் புதிய பாடத்திட்டத்தின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகளே நடைபெறும் எனவும் அவர் கூறினார். இது தொடர்பான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணப்) பரீட்சையின் புதிய பாடத் திட்டத்தின் கணித பாட வினாத்தாள்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கைகள் இரண்டு வாரத்தில் கிடைக்கும் எனவும், அதன் பின்னரே அப்பரீட்சை வினாத்தாள்கள் திருத்துவது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இதுபோன்ற கொடுமையான அரசை தமிழர்கள் ஒருபோதும் கண்டதில்லை

## மனோகணேசன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.23

இந்த நாட்டின் வரலாற்றிலேயே இப்போதைய மஹிந்த அரசைப்போல் கொடுமையான அரசைத் தமிழர்கள் முன்னெப்போதும் சந்தித்ததில்லை.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் அமைப்புகளின் தலைவர் மனோகணேசன் கூறினார்.

ஞாயிறன்று கட்சியின் மாவட்டத் தேர்தல் பிரசார அமைப்பாளர்கள் மத்தியில் ஹட்டன் டியூக் விடுதியில் அமைந்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்டப் பிரதான தேர்தல் அலுவலகத்தில் உரையாற்றிபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

''மலையக அமைச்சர்கள் போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசை ஆதரிக்கும் இரட்டைவேட அரசியல் என்னிடம் கிடையாது. நாம் மலையக அமைச்சர்களை எதிர்ப்பதை விட தமிழ் மக்களை வரலாறு காணாத கொடுமைகளுக்கு உள்ளாக்கியிருக்கும் இந்த அரசை எதிர்த்து அதை அகற்றுவதில்தான் முழு மூச்சுடன் அக்கறை காட்டுகின்றோம். இது எங்களது பகிரங்க நிலைப்பாடு. எமது மலையக இளைஞர், யுவதிகள் வேலையில்லாத காரணத்தால் கொழும்பில் வந்து பணிபுரிகின்ற நிலையில் இந்த அரசினால் கைது செய்யப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களில் பலர் காணாமல் போயுள்ளனர். அன்றைய அரசுகளில் மலையக அமைச்சர்களுக்கு வழங்கப் பட்டிருந்த முக்கியத்துவங்களும், ஒதுக்கீடுகளும் இன்றைய அரசால் வழங்கப்படவில்லை.

எனவேதான் மலையகத்தின் பிற்போக்குத் தலைமைகளை அகற்றுவதுடன் மட்டுமல்லாமல் இந்த அரசையும் அகற்றுவதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். இந்த அரசில் இருந்தபடியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும், அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமானையும் விமர்சிக்கின்ற மலையக அமைச்சர்களான சந்திரசேகரன், சுரேஷ் வடிவேலு, புத்திர சிகாமணி போன்றோர் இந்த அரசின் தமிழர் விரோத கொள்கைகளையும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும் நியாயப்படுத்துகின்றார்கள். இவர்களில் பலர் தனிப்பட்ட காரணங்களினாலும் இ.தொ.காவை எதிர்க்கின்றார்கள். எமது ஜனநாயக மக்கள் முன்னணி இவர்களிலிருந்து மாறுபட்டதாகும். எவருடனும் எமக்குத் தனிப்பட்ட விரோதம் கிடையாது. பாரிய அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாம் எமது கொள்கையை உறுதியுடன் முன்னெடுக்கின்றோம். இந்த அரசின் அராஜகத்தையும் இ.தொ.காவின் அடாவடித்தனத்தையும் எதிர்த்து மலையகத்திலும் தேசிய ரீதியாகவும் நாங்கள் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். இது எங்களது நேர்மையான வரலாறு. இதைச் சொல்லிதத்தான் நாம் மக்களிடம் வாக்குக் கோருகின்றோம். எம்முடன் இணைந்துகொள்ள விரும்பும் எவரும் எமது இந்த நேர்மையான கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் விட்டுக்கொடுப்பதற்கு இடமில்லை - என்றார். (த)

# அமைச்சர்களின் வீட்டு வாடகைக்கு வருடாந்தம் 13 கோடி ரூபா விரயம்!

கொழும்பு, டிசெ.23

அமைச்சர்களுக்கு வழங்கப்படும் தேவையற்ற வீட்டு வாடகைப் பணத்தினை நிறுத்தினால், அரசு வருடாந்தம் 13 கோடி ரூபாவை மீதப்படுத்தலாம் என்று ஐ.தே.கவின் எம்.பி. பாலித ரங்க பண்டாரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டுக்கு 35 அமைச்சர்கள் இருந்தால் போதும் என்ற நிலையில் இங்கு 108 அமைச்சர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் தமது வீட்டு வாடகைக்காக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபா பெற்று வருகின்றனர். சொந்த வீடுகளை வைத்துக் கொண்டே சில அமைச்சர்கள் வீட்டு வாடகையைப் பெற்று வருகின்றனர். இதை நிறுத்தினால் அரசு 13 கோடி ரூபாவை மீதப்படுத்தலாம் - என்றார்.

## 'சார்ஜன்ட்' பதவி வழங்கக் கோரி 43 கான்ஸ் டபிள்கள் மனுத் தாக்கல்

தேசியப் புலனாய்வுத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 43 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தங்களுக்கு 'சார்ஜண்ட' பதவி உயர்வு வழங்கப்படாமையை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் பன்னிருவர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தங்களுக்கு உரிய பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்து சிபாரிசு செய்திருந்தும் கூட அதற்கான நடவடிக்கையை பொலிஸ் திணைக்களமோ, பொலிஸ் ஆணைக்குழுவோ எடுக்கவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், தங்களுக்கு 2007 மே முதலாம் திகதி முதல் அந்த 'சார்ஜண்ட்' பதவி உயர்வை வழங்கும்படி சம்பந்தப்பட்டோருக்கு உத்தரவிடும் படியும் மனுவில் கோரியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசைக் கண்டித்து ஜேர்மனியில் கண்டனப் பேரணி

பிராங்போர்ட், டிசெ.23

அரசின் எல்லைதாண்டிய பயங்கரவாத செயலைக் கண்டித்து ஜேர்மனி வாழ் தமிழ்மக்கள் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஜேர்மனியில் உள்ள பிராங்போர்ட் நகரில் அண்மையில் அரசு 'கண்காட்சி' எனும் பெயரில் தமிழ் மக்கள் மீதான படுகொலை நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தது.

இதனைப் பார்வையிடச் சென்ற ஈழத் தமிழர்கள் இருவர் மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தினர் என்றும், இதில் ஒரு தமிழர் கதிக்குத்துக்கு இலக்காகியதுடன் இன்னொருதமிழர் அடிகாயங்களுக்கு உள்ளானார் என்றும் கூறப்பட்டது.

அரசின் இந்த எல்லை தாண்டிய பயங்கரவாத செயலைக் கண்டித்தும், தாக்குதலை நடத்தியவர்கள் மீது ஜேர்மனிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியும் கடந்த சனிக்கிழமை பிராங்போர்ட் நகரில் தமிழ் மக்களால் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

அரசைக் கண்டிக்கும் ஜேர்மன் மொழியிலான பதாதைகள் மற்றும் ஜேர்மனியில் சிங்களக் காடையர்களினால் தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமடைந்த தமிழரின் படங்களுடன் படுகொலைகளின் சாட்சிப் படங்கள் என்பனவற்றை பேரணியில் கலந்துகொண்ட மக்கள் தாங்கிச் சென்றனர்.

# 10 நாள்களுக்கு முன்பு கடத்தப்பட்டவர் பண்டாரிக்குளத்தில் நேற்றுச் சடலமாக மீட்பு!

வவுனியா, டிசெ.23

வவுனியா நகரப்பகுதியில் வைத்துப் பத்துத் நாள்களுக்கு முன்னர் கடத்தப்பட்டு காணாமல் போனார் என்று கூறப்படும் ஒட்டோ சாரதி ஒருவர் நேற்றுக் காலை பண்டாரிக்குளம் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இவர் இந்திரராசா நந்தகுமார் (வயது -26) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ். சாவகச்சேரியைச் சொந்த இடமாகக் கொண்ட இந்த நபர், வவுனியாவில் தனது சகோதரியுடன் வசித்து வந்தவர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த சில தினங்களில் இனந்தெரியாத முறையில் கொல்லப்பட்ட இரண்டாவது இளைஞர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான ஒருலட்சத்து 50ஆயிரம் ஓலைத் தட்டிகளில் ஒருபகுதியே நேற்று அனுப்பப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ரவி கருணாநாயக்க எம்.பி கூறியவை வருமாறு:-

நாட்டில் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டே செல்கின்றது. இதனால் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்து மக்கள் வாழ முடியாமல் துன்பப்படுகின்றனர்.

எமது நாட்டிற்கு அதிக இலாபத்தைப் பெற்றுக் கொடுத்த தேயிலையின் விலை கூட இப்போது வீழ்ச்சி அடைந்து விட்டது. இதனால் நாலரை லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இறப்பர், கறுவா போன்றவற்றின் விலைகளும் வீழ்ச்சி அடைந்து விட்டன. பொருளாதாரம் எல்லாப் பக்கங்களிலும் வீழ்ச்சியடைந்து நாட்டு மக்களின் கழுத்தை நசுக்குகின்றது.

மக்களுக்கு ஒரளவேனும் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பெற்றோலின் விலையைக் குறைக்க நீதிமன்றம் வழங்கிய உத்தரவு வேறு. அரசு அந்தத் தீர்ப்பை இன்றும் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் விவாதம் நடத்துவதற்காக உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு நாம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

பிரதமரை நேரில் சந்தித்து எமது இந்த வேண்டுகோள் அடங்கிய கடிதத்தை கையளித்துள்ளோம் - என்றார். (சி)

# முன்னரங்க நிலைகள் மீது நேற்று ஒன்பது தடவைகள் விமானத் தாக்குதல்

கொழும்பு, டிசெ. 23

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில்நேற்றுப் பிற்பகல் 1.30மணிக்கும் மாலை 6மணிக்கும் இடையில் ஆறு தடவைகள் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜானக நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுக்கு வடக்கே கடல் நீரேரியில் தரித்து நின்ற கடற்புலிகளின் இரண்டு படகுகள் மீது 'ஜெற்' விமானங்கள் நேற்று மாலை 6மணிக்கு தாக்குதல் நடத்தி அவற்றை அழித்து விட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

அதே பகுதியில் 'ஜெற்' விமானங்கள் நேற்றுப் பிற்பகல் 1.30மணிக்கும் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவித்த அவர்-

இரணைமடுவுக்கு வடக்கே நேற்றுப் பிற்பகல் 2.50மணிக்கும் 3.50 மணிக்கும் இடையில் ஜெற் விமானங்கள் மூன்று தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளன என்று கூறினார்.

கிளிநொச்சி நோக்கி முன்னேறும் 57 ஆவது படையணிக்கு உதவும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

புதுமுறிப்புக் குளத்தில் முன்னேறும் 57ஆவது படையணிக்கு உதவும் வகையில் எம்.ஐ.24 ரக ஹெலிகள் நேற்று மாலை 5.30மணிக்கு தாக்குதல் நடத்தின என்றும் அவர் கூறினார். (அ-01)

## மூன்று முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட புலிகளின் மண் அணையைக் கைப்பற்றியதாகவும் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் அறிவித்தது.

தமது தரப்பில் 10 பேர் பலியானதாகவும் 40 பேர் காயமுற்றதாகவும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இராணுவத்துக்கு ஆதரவாக விமானங்களும் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ)

## கிளிநொச்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள வேண்டு கோளை நாம் நிராரிக்கின்றோம்.

இது யதார்த்தமான வேண்டுகோளல்ல. எமது மக்களைப் பாதுகாக்கவே நாங்கள் ஆயுதங்களை ஏந்தினோம். அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை ஆயுதங்களை வைத்திருப்போம்.

சுதந்திரம், விடுதலை என்பன ஒரு நகரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பவையல்ல. அதில் தங்கியிருப்பவையுமல்ல.

மக்களின் ஆதரவு எமக்குள்ளதால் எம்மால் மேலும் பல சமூகங்களை, நகரங்களை உருவாக்க முடியும்.

எமது தாயகத்தில் மேலும் பல பகுதிகளைக் கைப்பற்றுவோம். பல சமூகங்களை உருவாக்குவோம் என்ற நம்பிக்கை நமக்குள்ளது.

கிளிநொச்சியை எமது போராளிகள் தக்கவைத்துக் கொள்வர். படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றினாலும் எமது போராட்டம் தொடரும் - என்று நடேசன் தெரிவித்துள்ளார். (த-ற)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் வான்படையின் ஹெலிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக[illegible] ஒருவர் படுகாயமடைந்துள்ளார். ஏழு வீடுகள் மற்றும் முருகன் கோவில் ஆகியன சேதமடைந்துள்ளன.

முள்ளிவாய்க்காலில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புகள் மீதும் வான்படையின் விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின. இதில் இராமச்சந்தின் (வயது - 58) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

**முருகன் கோவில் சேதம்**

முள்ளிவாய்க்கால் மேற்கு முருகன் கோவில் சேதமடைந்துள்ளதுடன், இடம்பெயர்ந்த மக்களின் ஏழு இடைக்கால வீடுகள் எரிந்துள்ளன. இதே மக்களின் கடல் தொழில் உபகரணங்களும் தாக்குதலில் அழிந்துள்ளன.

இதேவேளை, படையினரின் ஷெல் தாக்குதலில் முல்லைத்தீவு வற்றாப்பளையில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மணலாற்றில் இருந்து நேற்றுப் படையினர் வற்றாப்பளை முள்ளியவளை மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் வற்றாப்பளையில் சின்னத்துரை இராசமலர் (வயது - 50) என்பவர் படுகாயமடைந்துள்ளார் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே விமானங்கள் மற்றும் ஹெலிகள் தாக்குதல் நடத்தின என்று படைத்தரப்பில் கூறப்படுகிறது. (அ-சி)

# நெதர்லாந்தில் தமிழ் மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

வன்னியில் தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசின் கிளஸ்ரர் குண்டு வீச்சைக்



கண்டித்து நெதர்லாந்தில் உள்ள தமிழ் மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தினர்.

அம்சர்டாம் நகரில் உல்லாசப் பயணிகள் அதிகமாகக் கூடும் டாம் என்னும் இடத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் ஓவியம் வரைந்தும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் இப் போராட்டத்தினை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்தனர்.

நெதர்லாந்தில் உயர்வகுப்பில் கல்வி பயிலும் சில மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டம் பல வெளிநாட்டவர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது.

இதேபோன்று நெதர்லாந்தின் பல நகரங்களிலும் அதிகளவு வெளிநாட்டவர்களை ஈர்க்கும் வகையில் கவனயீர்ப்பு போராட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## கிளிநொச்சி நோக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி நோக்கி படையினர் மேற்கொண்ட முன்நகர்வு ஏற்கனவே முறியடிக்கப்பட்டு விட்டது.

கிளிநொச்சிக்கு மேற்கில் உருத்திரபுரம் பகுதிஊடாக படையினர் மேற்கொண்ட முன்நகர்வும் முறியடிக்கப்பட்டுள்ளது.

**100 படையினர் பலி; 250 பேர் காயம்**

மேலும் மூன்று முனைகளில் படையினரின் நகர்வுகளை முறியடிக்கும் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றைய முறியடிப்புத்தாக்குதல்களில் படையினர் தரப்பில் நேற்று மாலைவரை 100பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 250க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்த படையினரின் சடலங்களும், இராணுவத் தளபாடங்களும் களமுனையில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. (அ)

## வன்னி மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசும் பாதுகாப்புப் படையினரும் வழங்கியுள்ள பாதுகாப்பான இடங்களுக்கு வருவதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும்'' என ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''இதனை விடுதலைப் புலிகள் செய்யத்தவறும் பட்சத்தில் அரசு அவர்களைத் தடை செய்யும் நிலை உருவாகும். இதன் பின்னர் அவர்கள் பயங்கரவாத அமைப்பிற்கான சகல விளைவுகளையும் எதிர்கொள்ள நேரிடும்'' என்றும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

2009ஆம் ஆண்டினை எமது படைகளுக்கான வெற்றி ஆண்டாகவும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் வரலாற்றின் அத்தியாயங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆண்டாகவும் மாற்றுவோம் -என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## தடுத்து வைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டு பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் இல்லை என்றால் அவர்களை விடுதலை செய்யும்படியும் அவர் பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

JTI
CENTER FOR ICT EDUCATION
No.45, CLOCK - TOWER ROAD, JAFFNA.
Regd No.1525 E-Mail: jti@sltnet.lk
புதிய வருடத்திற்குரிய கணனிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கீழ்காணும் செயற்றிட்டங்களில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பங்களை 27.12.2008 தொடக்கம் அலுவலகத்தில் பெற்று பதிவினை உறுதிப்படுத்தி நேர அட்டவணையை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.
எமது கற்கை நெறிகள்
Course 1: க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கானது.
Diploma in Computer Studies (DCS)
Diploma in Desktop Publishing (DTP)
Course 2: தரம் 10,11, க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கானது
Information & Communication Technology (ICT)
General Information Technology (GIT)
Course 3: அரச, தனியார்துறை உத்தியோகத்தர்களுக்கான
On - line Computer Applications
சகல பயிற்சி நெறிக்குமான பதிவுக்கட்டணம் 200/= மட்டுமே
வாரநாள் பிரிவு 06.01.2009 10 மணி
பயிற்சிநெறி ஆரம்பம்:
வார இறுதி பிரிவு 10.01.2009 9 மணி
Director (Ad.) JTI, Jaffna.
Course Coordinator, ICT Education, JTI, Jaffna.

Microsoft Certified
Systems Engineer MCP - MCSE
★ 100% செய்முறைகளுடன் கூடிய நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ கணனித்துறையில் வேலை செய்வோருக்கு சர்வதேசதகுதி
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ ComTIA A+ (Hardware Technician-AUSTRALIA) கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.12.2008 12.00PM
Become an Engineer
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி,
MCS
Supported By

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
32 ஆவது வருட கல்விச் சேவையில்
A/L 2011
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்: 03.01.09 (8 am)
யாழில் தன்னிகரில்லாத் தனித்துமான ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.
★ பஸ்ஸிலிருந்து வருபவர்கள் ஸ்ரான்லி றோட்டாலும் சைக்கிளில் வருபவர்கள் சிராம்பியடி லேனாலும் வரவும்.
இன்று முதல் அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

விடுமுறைக்கால வகுப்புகள்
புவியியல்
திருK.S.சுரேன்
A/L 2009
விவசாயப் பாகுபாடு (மீட்டல்) 7 A.M
A/L 2010
Mon, Wed, Fri
மண் 8A.M
Mon, Wed, Fri
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.